வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 03 18.07.2022 திங்கட்கிழமை இதழ் : 224 பக்கங்கள் : 16

# கோட்டாபயவை வெளியேறுமாறு சிங்கப்பூர் அரசாங்கம் அழுத்தம்?

## மீண்டும் இலங்கை வருவதற்கு முடிவு



கொழும்பு, ஜூலை 18

பாதுகாப்புக்காக சிங்கப்பூரில் தங்கியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை அந்த நாட்டிலிருந்து வெளியேறுமாறு அந்நாட்டு அரசாங்கம் அழுத்தம் கொடுத்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாதுகாப்பு சிக்கல்களை காரணம் காட்டி 15 நாட்களுக்கு அவரை நாட்டை விட்டு வெளியேறுமாறு கேட்கப்பட்டுள்ளது. சிங்கப்பூர் அரசாங்கத்தின் இந்தத் தகவலை அந்த நாட்டின் அமைச்சர் காசி விஸ்வநாதன் கோட்டாபய ராஜபக்ஷவிடம் நேரில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக நாட்டில் பெரும் எதிர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதையடுத்து, அவர் கடந்த 13ஆம் திகதி அதிகாலை அவர் மாலைதீவுக்கு சென்றிருந்தார். அங்கிருந்து மறுநாளான 14ஆம் திகதி மாலை சிங்கப்பூருக்கு சென்றார்.

அங்கு அவரின் நண்பர் ஒருவருக்கு சொந்தமானது என்று கூறப்படும் வீட்டில் கோட்டாபய ராஜபக்ஷ தங்கியுள்ளார். இந்த நிலையில், கோட்டாபய ராஜபக்சவை 15

# இலங்கை நெருக்கடியை ஆராய இந்தியக் கட்சிகள் கூடுகின்றன!

## அகதிகள் விடயத்திலும் முடிவு எட்டப்படும்

புதுடில்லி, ஜூலை 18

**இலங்கை நெருக்கடி குறித்து விவாதிப்பதற்காக அனைத்துக் கட்சிகள் கூட்டத்துக்கு இந்தியாவை ஆளும் கட்சியான பாரதிய ஜனதா கட்சி அழைப்பு விடுத்துள்ளது.**

நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு இந்தக் கூட்டத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கர், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோர் விளக்கமளிக்கவுள்ளனர். இதில் பிரதமர் நரேந்திர மோடியும் பங்கேற்பார் என்று தெரிய வருகின்றது.

இந்திய பாராளுமன்ற விவகார அமைச்சர் பிரகலாத் ஜோஷி நேற்று 15

## போட்டியிலிருந்து விலகத் தயார்!

### அநுரகுமார அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 18

எதிர்கால அரசியல் நிகழ்ச்சி நிரல் இல்லாத இரு பாராளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி மற்றும் பிரதமராக நியமித்தால் ஜனாதிபதி பதவிக்கான போட்டியிலிருந்து விலகத் தயார் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்கால அரசியல் நிகழ்ச்சி நிரல்களின்றி ஜனாதிபதி மற்றும் பிரதமரை நியமிப்பது தொடர்பில் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியதாகவும் அவர் கூறினார்.

சில கட்சிகள் இந்த விடயத்தில் ஒரு மித்த கருத்துக்கு வர ஒப்புக் கொண்டாலும் இப்போது அவற்றின் நிலைப்பாடு மாறி விட்டது. எதிர் 15

## திட்டமிட்ட நாடகம் மூலம் ரணில் ஜனாதிபதி ஆவார்!

கொழும்பு, ஜூலை 18

பதில் ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க நன்கு திட்டமிட்ட நாடகம் ஒன்றை அரங்கேற்றி எதிர்வரும் 20ஆம் திகதி ஜனாதிபதியாகப் பதவியேற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க மணலில் குளவி சுழலும் காலத்தை கடந்து செல்கின்றார். 2019ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்த கொள்கைகளால் அவரும் அவ 15

## தமிழ் தேசியக் கட்சிகள் இணையவழியில் பேச்சு!

### முன்னணியையும் சேரக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 18

ஜனாதிபதி வேட்பாளர்கள், அமையப்போகும் அரசாங்கம், போராட்ட அமைப்புகளிடம் தமிழ் மக்கள் சார்பில் கோரிக்கைகளை முன்வைக்கும் பொருட்டு ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து வரைவு ஒன்றை தயாரித்துள்ளன.

அத்துடன், தமிழ் மக்களின் நலன் கருதி இந்த முயற்சியில் இணைந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிடமும் கோருவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 15





## காலிமுகத்திடல் போராட்டம்: 100 நாட்கள் நேற்றுடன் நிறைவு

கொழும்பு, ஜூலை 18

பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து அரசாங்கத்துக்கு எதிராகக் காலிமுகத்திடலில் இடம்பெறும் போராட்டம் நேற்று 100 நாட்களை நிறைவு செய்தது.

இந்தப் போராட்டம் 15

## எரிபொருட்களின் விலைகள் நேற்றிரவு முதல் குறைந்தன!

### 21முதல் விநியோகம் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 18

நேற்று இரவு 10 மணி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டன என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், லங்கா ஐ. ஓ. சி. நிறுவனங்கள் தனித்தனியாக அறிவித்தன.

இரு நிறுவனங்களின் அறிவிப்பின்படி, 15

## தேசிய எரிபொருள் அனுமதி; 10 இலட்சம் பதிவுகள் கடந்தது!

கொழும்பு, ஜூலை 18

தேசிய எரிபொருள் அனுமதிப் பத்திரத்தை பெறுவதற்காக 10 இலட்சம் பேர் வெற்றிகரமாக தமது பதிவுகளை செய்துள்ளனர் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

எரிபொருளை பெறுவதற்காக இணையம் மூலம் அனுமதிப் பத்திரம் பெறும் முறைமை நேற்று முன்தினம் அறிமுகம் செய்யப்பட்டது. நேற்று மாலைக்குள் 10 இலட்சம் பேர் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். 15

## இப்படியும் நடக்கிறது...!

இரண்டாயிரத்து ஐந்தாம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க, சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வு ஒன்றை முன்வைப்பேன் என்றார். ஆனால், அவரை எதிர்த்து போட்டியிட்ட மகிந்த ராஜபக்ஷவோ, அதற்கு முற்றிலும் எதிரான நிலைப்பாட்டைக் கொண்டவராக இருந்தார்.

இரண்டு வேட்பாளர்களும் தெற்கில் சமமான நிலையில் இருந்தபோது தமிழ் மக்களின் வாக்குகளே வெற்றியைத் தீர்மானிக்கும் வாக்குகள் என்ற நிலையில் இருந்தன. அந்த வேளையில், தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக தேர்தலைப் புறக்கணிக்க விடுதலைப் புலிகள் முடிவெடுத்தனர்.

கடைசியில் ஒரு இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றார். தமிழ் மக்கள் அந்த தேர்தலில் வாக்களித்திருந்தால், மூன்று இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளை ரணில் பெற்றிருப்பார். அதன்மூலம் இலகுவான வெற்றியை அடைந்திருப்பார்.

அவர் வெற்றிபெற்றிருந்தால், சமஷ்டியுடனான தீர்வை தந்திருப்பாரா அல்லது அவரால் மாத்திரம் அதனைத் தந்திருக்க முடியுமா என்பது வேறு கதை. ஆனால், அவரும் எங்களை ஏமாற்ற, ஒரு சந்தர்ப்பத்தை கொடுத்திருக்கலாம்.

பின்னர் நல்லாட்சி அரசாங்கத்தின்போது, பிரதமராக இருந்த ரணில், தமிழ் தரப்பிடமே அரசியலமைப்பு சட்டத்தைத் தயாரிக்கும் முக்கிய பொறுப்பை தந்ததால், நாமே தயாரித்த அரசியலமைப்பு சட்டத்தில் "எக்க ராஜ்ய" என்ற பதத்தையே பல்வேறு கோணங்களில் வியாக்கியானம் செய்து நமக்குள்ளேயே பட்டிமன்றம் நடத்தும் நிலையை ரணில் தனக்கே உரிய "கெட்டித்தனத்துடன்" செய்து முடித்தார்.

மீண்டும் இரண்டரை ஆண்டுகளுக்கு ஜனாதிபதியாகும் சந்தர்ப்பம் ஒருவருக்கு கிடைக்கவிருக்கின்றது.

இந்த ஜனாதிபதி தேர்வுக்கான போட்டியில் இதுவரை நான்கு பேர் களத்தில் இறங்கத் தயாராக இருக்கின்றனர். அவர்களில் தற்போது பதில் ஜனாதிபதியாக இருக்கும் ரணில் வெற்றிபெறுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாக இருப்பதாக நம்பப்படுகின்றது.

இந்நிலையிலேயே, போட்டியிடும் ஒவ்வொருவரும் இப்போது தமக்கான ஆதரவை பெறுவதில் கட்சிகளுடனும் எம்.பிக்களுடனும் தனித்தனியாக பேசிவருகின்றனர்.

நாட்டில் இப்போது இருக்கும் நிலையில் இனவாதம் மறக்கப்பட்டுவிட்டதாகவும் அதனால், தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கும் தீர்வு காண சந்தர்ப்பம் கிடைத்திருப்பதாகவும் சிலர் தொடர்ச்சியான கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

தமிழ் தேசியக் கட்சிகள் தமது கோரிக்கையை முன்வைத்து அதனை ஏற்றுக்கொள்கின்ற ஒருவரையே ஆதரிக்க வேண்டும் என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

தமிழ் மக்களின் பிரச்னைக்கு நிறைவேற்று ஜனாதிபதியால் மாத்திரம் தீர்வைக் கண்டுவிடக்கூடிய நிலையில் நமது அரசியலமைப்பு இருக்கின்றதா? அவர் நினைத்தாலும் அதனைச் செய்ய முடியுமா என்பது நமது தலைவர்களுக்கு தெரியாததல்ல.

இன்று இருக்கும் பாராளுமன்றம் மகிந்த விசுவாசிகளாலேயே நிரம்பியிருக்கின்றது.

இந்த நிலையில் நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுக்க- தீர்வை முன்வைத்து அதனை ஏற்றுக்கொள்கின்ற ஒருவரையே தமிழ்த் தேசியக் கட்சிகள் ஆதரிக்கவேண்டும் என்று சிலர் கோரிக்கை வைப்பதைப் பார்க்கும்போது நமது நிலையை எண்ணிக் கவலைப்படவே முடியும்.

ஒரு ஜனாதிபதியால் தன்னிச்சையாக செய்யக்கூடிய விடயங்களை மாத்திரம் நிபந்தனையாக விடுத்து அதனை யாவது பெற்றுக்கொள்வதே புத்திசாலித்தனமானது.

படையினரை வடக்கு, கிழக்கில் குறைப்பது, படையினர் வசமிருக்கும் தனியார் காணிகளை முற்றாக விடுவிக்கக் கோருவது. பலாலி விமான நிலையத்தை விஸ்தரித்து அனைத்துவகை விமானங்களும் தரையிறங்கக்கூடிய சர்வதேச விமான நிலையமாக மாற்றுவது. காங்கேசன் துறைமுகத்தை விஸ்தரிப்பது. அரசியல் கைதிகளை விடுவிப்பது. காணாமல்போனவர்களுக்கு நியாயமான இழப்பீட்டை பெற்றுக்கொடுப்பது. மாகாண சபைகளுக்கான தேர்தல்களை உடன் நடத்துவது. இப்படிப் பல அவசியமான தேவைகள் இருக்கின்றன.

இவைபோன்ற தேவைகளை ஒரு நிறைவேற்று ஜனாதிபதியால் நிறைவேற்றமுடியும். அதைவிடுத்து சமஷ்டித் தீர்வு, வடக்கு, கிழக்கு இணைப்பு என்று கோரிக்கை வைப்பது தமிழ் மக்களுக்கு எந்தவகையிலும் உதவப்போவதில்லை. இவைபோன்ற கோரிக்கைகளை அவர் ஏற்றுக்கொண்டாலும், இதனை நிறைவேற்ற பாராளுமன்றின் அனுமதியைப் பெற இன்றைய பாராளுமன்றத்தால் முடியாது.!

- ஊர்க்குருவி

## ரணிலுக்கு ஆதரவு நிலைப்பாடு; பீரிஸுக்கு விரைவில் பதில்!

### காரியவசம் எம். பி.



கொழும்பு, ஜுலை 18

ஜனாதிபதி பதவி தெரிவில் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பான கட்சியின் தீர்மானம் குறித்து தெளிவுபடுத்துமாறு கோரி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர், பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் அனுப்பியுள்ள கடிதத்துக்கு விரைவில் பதில் வழங்கப்படும் என்று கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

தமது கட்சி மேற்கொண்டுள்ள தீர்மானத்தில் எவ்வித மாற்றங்களும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது, தமது கட்சியின் பெரும்பான்மையானோரின் நிலைப்பாடு என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஜுலை 18

உலகெங்கும் வாழும் மக்கள் அனைவரும் நெருக்கடிகள் நீங்கி, சுபீட்சமான வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இறை ஆசி வேண்டி பிரார்த்தனை நடைபெறுகிறது.

இந்தப் பிரார்த்தனை வரிசையில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு அச்சுவேலி - பத்தமேனி - சீத்தாங்குளம் பிள்ளையார் கோவிலின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ பா. மனோகரக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையில் நேரடியாக ஒலிபரப்பாகும். (ஐ)

## கிளிநொச்சி மருத்துவமனையின் பொது மக்களுக்கான அறிவிப்பு!

கிளிநொச்சி, ஜுலை 18

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து வெளி மாவட்ட மருத்துவமனைகளுக்கு சிகிச்சைகளுக்கு செல்லும் மக்கள் தற்போது ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடியால் செல்ல முடியாத நிலைமை ஏற்படின், அவர்கள் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனை நிர்வாகம் வெளியிட்டுள்ளது.

மேலும், மாதாந்த அல்லது ஏனைய சிகிச்சைகளுக்கு செல்லும் பொது மக்கள் போக்குவரத்து நெருக்கடியால் செல்ல முடியாது நேரின் எமக்கு அறிய தரவும். அவர்களுக்கு மாவட்டத்தில் சிகிச்சை அளிக்க முடியுமாயின் இங்கேயே சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்படும்.

இங்கு சிகிச்சை அளிக்க முடியாதவர்களுக்கு போக்குவரத்து ஏற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனவே, மாவட்டத்துக்கு வெளியே சிகிச்சைக்காக செல்கின்ற பொது மக்கள் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்நோக்கின் மாவட்ட வைத்தியசாலையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ)

## மரக்கறி விலை மீண்டும் உயர்வு



கொழும்பு, ஜுலை 18

போக்குவரத்துக்கு எரிபொருள் இன்மையால் சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் மீண்டும் உயர்ந்துள்ளன.

இதனால் தமது விளைச்சலை விற்பனை செய்ய முடியாமல் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இதனால், பயிர் நிலங்களிலேயே அவை அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன், மரக்கறிகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. (ஐ)

## நடமாடும் எரிபொருள் வழங்கல் அறிமுகப்படுத்துவதற்கு திட்டம்!

### அமைச்சர் காஞ்சன அறிவிப்பு

கொழும்பு, ஜுலை 18

முச்சக்கரவண்டிகள், மின்பிறப்பாக்கிகளுக்கு எரிபொருளை விநியோகிப்பதற்காக நடமாடும் எரிபொருள் விநியோக முறைமையை விரைவில் நாடளாவிய ரீதியில் செயல்படுத்த எதிர்பார்க்கப்படுவதாக எரிசக்தி மற்றும் மின் சக்தி அமைச்சர் காஞ்சன விஜய சேகர தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நிலையங்கள் இல்லாத இடங்களில் முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்களுக்கு பயன்படுத்தப்படும், வகையில் இந்த நடமாடும் எரிபொருள் விநியோக முறைமை விரைவில் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் என நம்புகின்றோம்" என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## எரிபொருள் அனுமதி அட்டைக்கே யாழில் பெற்றோல் வழங்கப்படும்!

### மாவட்ட செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 18

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எரிபொருள் அட்டைக்கே எரிபொருள் வழங்கப்படும் என்று அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எரிபொருள் விநியோக ஒழுங்கு முறை தொடர்பில் தேசிய ரீதியிலான வேலைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட முன்னரே எரிபொருள் அட்டை விநியோகத்தை நாம் ஆரம்பித்துவிட்டோம். இப்போது தேசிய ரீதியான வேலைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதனை நாம் புறக்கணிக்க முடியாது. ஆனாலும், யாழ். மாவட்டத்தில் எரிபொருள் அட்டை தொடர்ந்தும் வழங்கப்பட்டு, அதன் ஊடாகவே விநியோக ஒழுங்கு தொடர்ந்தும் முன்னெடுக்கப் படும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
18.07.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஆடி 02

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# இந்தியாவின் சர்வகட்சி அழைப்பு?

இலங்கையின் கடன் நிலைமையும் பொருளாதார நெருக்கடியும் ஏனைய நாடுகளுக்கு ஓர் எச்சரிக்கையென்று, சர்வதேச நாணய நிதியத்தின் அறிவித்திருக்கின்றது. நாடுகள் மீளச் செலுத்த முடியாதளவுக்கு கடன் சுமைக்குள் விழும்போது, அந்த நாடு எவ்வாறான பிரச்னைகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதற்கு இலங்கை ஓர் உதாரணமாகியிருக்கின்றது.

இந்த நிலையில் பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டிருக்கும் அரசியல் மற்றும் கிளர்ச்சி நடவடிக்கைகள் உடனடி அயல்நாடான இந்தியாவுக்கு அயலக நெருக்கடியாக மாறியிருக்கின்றது. ஏனெனில், உள்நாட்டு யுத்தத்தின்போது, தமிழ்நாட்டை நோக்கி மக்கள் அகதிகளாக சென்றது போன்றதொரு சூழல் மீளவும் உருவாகி வருகின்றது. இவ்வாறானதொரு சூழலிலேயே இந்தியா, நிலைமைகள் தொடர்பில் ஆராய சர்வ கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருக்கின்றது.

இந்திய அரசாங்கம், சர்வகட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருக்கும் நிலைமையானது, இலங்கையின் பிரச்னைகளின் விளைவுகளின் கடுமையை உணர்த்துகின்றது. ஏனெனில், இலங்கை தீவுக்குள் இடம்பெறும் பாரதூரமான பிரச்னைகள் இந்தியாவின் தேசிய பாதுகாப்போடு தொடர்புடையவை. அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற கிளர்ச்சி நடவடிக்கைகளும் இந்தியாவால் உன்னிப்பாக நோக்கப்படுகின்றது.

எதிர்வரும் 20ஆம் திகதிக்கு பின்னரும் இவ்வாறான கிளர்ச்சிகள் இடம்பெறுவதற்கான நிலைமைகள் காணப்படுகின்றன. நிலைமைகள் கட்டுப்பாட்டை மீறினால், இந்தியா தவிர்க்க முடியாமல் தலையீடு செய்ய வேண்டிய சூழலும் ஏற்படலாம். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், ஆளும் பி. ஜே. பி. அரசாங்கம் சர்வகட்சி சந்திப்புக்கு அழைப்பு விடுத்திருக்கின்றது.

இனிவரப் போகும் காலத்தில் எவர் ஜனாதிபதியாக இருந்தாலும்கூட, நிலைமைகள் உடனடியாக சீராகிவிடப் போவதில்லை. ஏனெனில், நிலைமைகள் ஏற்கனவே கட்டுப்பாட்டை மீறிச் சென்றுவிட்டன. இந்த நிலையில் மீளவும் அரசியல் கொந்தளிப்புக்கள் ஏற்பட்டால், இராணுவத்தைக் களமிறக்குவதைத் தவிர வேறு தெரிவுகள் இருக்காது. இதுவரை இராணுவத்துக்கும் பொது மக்களுக்கும் இடையில், எந்தவொரு பாரதூரமான முறுகல் சம்பவங்களும் இடம்பெறவில்லை. இராணுவமும் அமைதியாகவே விடயங்களைக் கையாண்டு வருகின்றது.

ஆனால், மீளவும் ஒரு கிளர்ச்சி நடவடிக்கை இடம்பெறுமாக இருந்தால், நிலைமைகள் இப்போதிருப்பதை போன்றுதான் இருக்கும் என்பதில்லை. இதேவேளை கிளர்ச்சி நடவடிக்கைகள் தீவிரமடைந்து, வெளித்தரப்புக்கள் கிளர்ச்சிக் குழுக்களுக்கு மறைமுகமாக ஆதவளிக்கின்ற நிலைமைகள் ஏற்படுமாக இருந்தால், இந்தியாவுக்கு பாரிய நெருக்கடிகள் ஏற்படலாம். அவ்வாறானதொரு நிலைமை ஏற்படாத வரையில் சூழலை தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டிய தேவையும் இந்தியாவுக்க உண்டு. இலங்கையில் ஏற்படும் எந்தவொரு பிரச்னையும் இந்தியாவுக்கு சிக்கலானதுதான். ஏனெனில், இலங்கையை தளமாகக் கொண்டு, இந்திய எதிர்ப்பு சக்திகள் இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்க முடியும். இப்போதிருக்கின்ற சூழலில், கொழும்பு மோசமான அரசியல் நெருக்கடிக்குள் இருப்பதால், தொடர்ந்தும் இலங்கையானது ஒரே நேரத்தில், உள்ளக பாதுகாப்பையும் வெளியக சக்திகளையும் கண்காணிக்கும் தகுதியை இழந்திருக்கின்றது. இலங்கையின் பாதுகாப்பு நிலைமைகள் சுமுகமாகவும் இருக்குமென்று எதிர்பார்க்க முடியாது. எனவேதான் இந்தியா விசேட கவனத்தை செலுத்த ஆரம்பித்திருக்கின்றது.

இலங்கைத் தீவின் நிலைமையானது, ஆயுத விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப நாட்களை நினைவூட்டுவதுபோல் இருக்கின்றன. அன்றைய சூழலிலும் இலங்கைத் தீவு, இந்தியாவின் நேரடியான கண்காணிப்பின் கீழ் இருந்தது. இந்த சந்தர்ப்பத்தில் தமிழர் தரப்புக்கள் மிகுந்த எச்சரிக்கையுடனும் செயல்பட வேண்டியிருக்கின்றது.

# பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க!

- அனந்த பாலகிட்ணர் -



இலங்கையின் அரசியலமைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் ஊடாக புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தல் முதல் முறையாக எதிர்வரும் 20ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

பிரதான வேட்பாளர்களாக பதில் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, பொதுஜன பெரமுன உறுப் பினர் டலஸ் அழகப்பெரும மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி.) தலைவர் அநுர குமார திஸநாயக்க ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

போட்டியாளர்களில் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே நீண்ட கால அரசி யல் அனுபவமுடையவராக இருக்கின்றார்.

இலங்கையின் முதலாவது நிறைவேற்ற திகார ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன வின் அரசியல் வாரிசு என்று ரணில் விக்கிரம சிங்க கருதப்பட்டார். மறைந்த ஐக்கிய தேசி யக் கட்சி ஜனாதிபதிகளான ஆர். பிரேமதாஸ, டி. பி. விஜயதுங்க ஆகியோரைத் தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் போட்டி யிட்டு ஜனாதிபதியாக வரலாம் என்றே பெரி தும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவர் போட்டியிட்டிருந்த ஜனாதிபதி தேர்தல் வெற்றி பெற முடியவில்லை.

இறுதியாக பாராளுமன்ற தேர்தலிலும் தோல்வியடைந்து ஒரு நியமன பாராளுமன்ற உறுப்பினராகவே அவர் தெரிவாகியிருந்தார். இதன் பின்னர் கடந்த மே மாதம் ஆரம்பமான முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வெளியேற்றும் ஆர்ப்பாட்டம் வெற்றி கண்டதையடுத்து தற்போது பதில் ஜனாதிபதியாக அரசியலமைப்பின் அடிப்படையில் இருந்து வரும் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் புதன்கிழமை பாராளுமன்ற உறுப்பினர்களிடையேயான ஜனாதிபதி தெரிவில் போட்டியிடவுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் ஒரு பிரதமராக நியமனமாகிய தன் மூலம் ஆழமறியாது காலை விட்டு தற்போது ‘அரசனை நம்பி புருஷனை கைவிட்ட’ நிலையில் ரணில் விக்கிரமசிங்க காணப்படுகின்றார்.

முன்னாள் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கவின் காலம் வரை பலமான அரசியல் அத்திபாரத்துடன் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி ரணில் தலைமையேற்றதன் பின்னர் படிப்படியாக ஆட்டம் கண்டு தற்சமயம் ஓர் எதிர்கட்சி என்ற அந்தஸ்தையும் இழந்துள்ளது.

‘ஆலை இல்லாத ஊருக்கு இலுப்பை பூ சர்க்கரை’ என்ற முதுமொழிக்கு ஒப்பாகவே தகுந்த தலைமைத்துவங்களை கொண்டிராதவர்களின்றி இருக்கின்ற ஐக்கிய தேசிய கட்சிக்கு ரணிலின் தலைமைத்துவம் காணப்படுகின்றது.

கடந்த மே மாதம் ஆரம்பமான ‘கோட்டா கோ ஹோம்’ போராட்டம் ஆரம்பமாகி உத்வேகமடைந்த வேளையில் ரணில் விக்கிரமசிங்க முன்னாள் ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு இணங்க அவரின் கீழ் பிரதமராக பதவியேற்றதன் காரணமாக கோட்டாபய ராஜபக்ஷ தமது பதவியில் சிலகாலம் வரை தாக்குப்பிடிக்கக்கூடியதாக இருந்தது.


இல்லையேல் கோட்டாபய ராஜபக்ஷ காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டம் ஆரம்பமான குறுகிய காலத்திலேயே தமது பதவியிலிருந்து விலகியிருக்க முடியும். ஆனால், பிரமதர் பதவியை ஏற்று கோட்டாபயவுக்கு தோள் கொடுத்து கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் நீடிக்க வைத்திருந்தார் ரணில்.

இதேவேளை மறுபுறத்தே கோட்டாபய பக்கம் சாராது ரணில் விக்கிரமசிங்க இருந்திருப்பாரேயானால் அவரால் தனது தனித்துவத்தைக் காப்பாற்றியிருக்க முடியும். எனவே, தனது முக்கியத்துவத்தையும் பழம்பெரும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் மாண்பையும்ரணில் விக்கிரமசிங்க அடகு வைத்துள்ளார்.

இந்த வகையில் ஆளும் கட்சியான பொது ஜன பெரமுனவில் ஒரு பிரதமராக இருகின்றபோதிலும் அந்தக் கட்சியின் டலஸ் அழகப்பெருமவும் ஜனாதிபதி தேர்தல் களத்தில் இறங்கியுள்ள நிலையில் ஆளுந்தரப்பினரின் முழு அளவிலான ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடைக்குமா என்பதுகூட சந்தேகமே. சிறுபான்மையின கட்சிகள் எவ்வளவு தூரம் ரணிலை ஆதரிப்பர் என்பதனையும் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி தலைவரான சஜித் பிரேமதாஸவும் களமிறங்கியுள்ள நிலையில் ரணிலுக்கான ஆதரவை பெரியளவில் எதிர்பார்ப்பதற்கு இல்லை. ஜே. வி. பி. வேட்பாளராக அதன் அரசியல் பிரிவான தேசியமக்கள் சக்தி தலைவர் அநுரகுமார திஸநாயக்கவும் களத்தில் இருக்கின்றார். அவருக்கு பெரும் கட்சிகள் சார்பாக ஆதரவு கிடைக்குமென்று எதிர்பார்க்க முடியாது . இத்தகைய பின்னணியில் எதிர்வரும் பாராளுமன்றம் ஊடாக முதல் தடவையாக இடம்பெறும் ஜனாதிபதி தேர்தல் சுவாரசியமானதாக இருக்குமென்றே கருதலாம்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு

ஜூலை - 18 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - ஆடி 02
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : சூன்ய



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
எதிர்பார்த்த தகவல் உங்களுக்கு வந்து சேரும். நண்பர்கள் உதவி செய்வார்கள். உங்களைத் தேடி பெரியவர்கள் வருவார்கள். திடீர் யோகம் ஏற்படும் நாள். மகிழ்ச்சியான நாள்.

**இடபம்**
வாய்ப்புகள் உங்களைத் தேடி வரும். நேற்றைய எதிர்பார்ப்பு ஒன்று இன்று நிறைவேறும். தொழிலை விரிவு செய்ய திட்டமிடுவீர்கள். வர வேண்டிய பணம் வந்து சேரும்.

**மிதுனம்**
வருமானத்திற்குரிய வழிகளைக் கண்டறிவீர்கள். உங்கள் முயற்சி லாபமாகும். உங்கள் எண்ணம் நிறைவேறும். இறை வழிபாட்டில் மனம் செல்லும். செயல்களில் இருந்து வந்த தடை விலகும்.

**கடகம்**
உடல் சோர்வினால் ஓய்வை விரும்புவீர்கள். புதிய முயற்சி இன்று வேண்டாம். செயல்களில் குழப்பம் உண்டாகும். பயணத்தில் கவனம் தேவை. வாகனம் பழுதடையக்கூடும். நிதானம் அவசியம்.

**சிம்மம்**
உங்கள் வார்த்தைக்கு குடும்பத்தினர் மதிப்பளிப்பார்கள். உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

**கன்னி**
உறவினர் ஒருவருக்கு ஏற்பட்ட பிரச்னையை முன்னின்று தீர்த்து வைப்பீர்கள். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். பொதுநலனில் அக்கறை காட்டுவீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும்.

**துலாம்**
பொறுப்புகள் அதிகரிக்கும். குடும்பத்தினருடன் வாக்குவாதம் வேண்டாம். சிந்தித்து செயல்பட வேண்டிய நாள். பயணத்தால் ஆதாயம் காண்பீர்கள். மாற்று இனத்தவரால் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**விருட்சிகம்**
கோயிலுக்கு செல்வீர்கள். குடும்பத்தினருடன் குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்வீர்கள். உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பார்த்த வரவு உண்டாகும்.

**தனுசு**
வெளி வட்டாரத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். நண்பர்களின் வழியே நன்மை காண்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். வேலை தேடியவர்களுக்கு வாய்ப்பு வரும். முயற்சி பலிதமாகும்.

**மகரம்**
எதிர்கால வாழ்க்கைக்கு அடித்தளம் அமைப்பீர்கள். குடும்பத்தை மகிழ்ச்சிப்படுத்துவீர்கள். பண வருவாய் அதிகரிக்கும். குடும்பத்தினர் உதவியுடன் தொழிலில் ஏற்பட்ட பாதிப்பை சரி செய்வீர்கள்.

**கும்பம்**
சங்கடத்தை மறந்து செயல்படுவீர்கள். கடந்த கால அனுபவங்களைக் கொண்டு உங்கள் வளர்ச்சியில் வழி காண்பீர்கள். பழைய பிரச்னை ஒன்று முடிவிற்கு வரும். நிதிநிலை உயரும்.

**மீனம்**
எதிர்பார்த்த தகவல் வீடு வந்து சேரும். செலவுகளைக் கட்டுப்படுத்துவது பற்றி சிந்திப்பீர். குடும்பத்தில் உங்கள் பேச்சுக்கு மதிப்புண்டாகும். அனுபவசாலிகளின் அறிவுரையுடன் முயற்சி ஒன்றில் வெற்றி காண்பீர்கள்.



### மாணவி மர்ம மரணம்:

# கள்ளக்குறிச்சியில் வெடித்தது கலவரம்!

சென்னை, ஜூலை 18

தமிழ்நாடு கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் அருகே தனியார் பாடசாலையில் மாணவி மர்மமான முறையில் உயிரிழந்தார்.

மாணவி மரணத்துக்கு நீதி கோரி, கடந்த 5 நாள்களாக தொடர் சாலை மறியலில் அந்தப் பகுதியினர் ஈடுபட்ட நிலையில், நேற்று போராட்டக்காரர்கள் பள்ளி வளாகத்தை சூறையாடினர். பொலிஸாரின் வாகனங்களுக்கு தீ வைத்தனர். இதனால் அப்பகுதியில் கலவரம் வெடித்தது.

கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டம், பெரியநெசலூரைச் சேர்ந்த இராமலிங்கம் மகள் ஸ்ரீமதி (17). இவர், கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் அருகே கனியாமூரில் தனியார் பாடசாலையில் விடுதியில் தங்கியிருந்து, பிளஸ் 2 (உயர்தரம்) கற்று வந்துள்ளர். இந்த நிலையில், அந்த மாணவி கடந்த 13ஆம் தேதி மர்மமான முறையில் உடலில் காயங்களுடன் பாடசாலை வளாகத்தில் இறந்து கிடந்தார். இதுகுறித்து பெற்றோர், அவரின் உறவினர்கள், பொதுமக்கள் கடந்த 5 நாள்களாக மாணவி மரணத்துக்கு காரணமானவர்களை கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி போராட்டம் நடத்தினர். அத்துடன், மாணவியின் உடலையும் வாங்க மறுத்து வருகின்றனர். இந்நிலையில், நேற்று ஆறாவது நாளாக மாணவியின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அதிக அளவிலான பொதுமக்கள் கூடியதால், போராட்டக்காரர்கள் பாடசாலை வளாகத்தை முற்றுகையிட்டனர்.

இதையடுத்து பாடசாலை மீது கற்களை வீசித் தாக்குதல் நடத்தினர். போராட்டக்காரர்கள் கற்களை வீசித் தாக்கியதில் உதவி பொலிஸ் ஆணையாளர் உட்பட 20 பொலிஸார் காயங்களுக்கு இலக்காகினர்.

கலவரத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். போராட்டக்காரர்கள்மீது தடியடி நடத்தி கலைக்க முயன்றனர்.

சாலையோரம் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பொலிஸாரின் வாகனங்களுக்கு போராட்டக்காரர்கள் தீ வைத்து எரித்தனர். தனியார் பாடசாலை வளாகத்தில் இருந்த டிராக்டர் உள்ளிட்ட வாகனங்களுக்கு போராட்டக்காரர்கள் தீ வைத்தனர். மேலும் பாடசாலை வளாகத்தில் நுழைந்து கற்களை வீசித் தாக்கி சூறையாடினர்.

போராட்டக்களத்தில் பலர் கூடி வருவதால், கட்டுப்படுத்த முடியாமல் பொலிஸார் திணறினர். இதைதத் தொடர்ந்து அந்தப் பகுதியில் ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# விசாரணை முடிவில் நிச்சயம் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர்!

## முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஜூலை 18

கள்ளக்குறிச்சி மாணவியின் மரணம் குறித்து நடைபெற்று வரும் பொலிஸாரின் விசாரணை முடிவில், குற்றவாளிகள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள் என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கலவரத்தைக் கட்டுப்படுத்தும் வகையில், உள்துறை செயலாளர், பொலிஸ் தலைமை இயக்குநர் ஆகியோர் கள்ளக்குறிச்சி செல்ல உத்தரவிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கள்ளக்குறிச்சியில் நிலவிவரும் சூழல் வருத்தமளிக்கிறது. மாணவியின் மரணம் குறித்து நடைபெற்று வரும் காவல்துறை விசாரணையின் முடிவில், குற்றவாளிகள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள்.

இந்நிலையில், போராட்டத்தைக் கைவிட்டு மக்கள் அமைதி காக்க வேண்டும் என முதல்வர் மு. க. ஸ்டாலின் தனது ருவிட்டர் பதிவு மூலமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# கொரோனா தொற்றிலிருந்து மீண்டார் முதல்வர் ஸ்டாலின்!

சென்னை, ஜூலை 18

முதல்வர் மு. க. ஸ்டாலின் கொரோனா தொற்றிலிருந்து முற்றிலும் குணமடைந்து விட்டார் என்று மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்றைய தினம் வீடு திரும்புவார் என்றும், ஒரு வாரத்துக்கு வீட்டில் இருந்தபடி ஓய்வெடுக்க வேண்டும் எனவும் மருத்துவமனை தனது அறிக்கையில் அறிவுறுத்தியுள்ளது.

முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கு கடந்த 12ஆம் திகதி கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவர் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

அவர் உடல்நலம் தேறி வருகிறார். எனினும் சில நாள்களுக்கு ஓய்வு தேவை என அறிவுறுத்தப்பட்டுள்ளதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், முதல்வர் மு. க. ஸ்டாலின் கரோனா தொற்றிலிருந்து முழுவதும் குணமடைந்துள்ளார் என்று மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ஐ)

# 10 வீதமான எரிபொருள் இனி உற்பத்தி துறைக்கு

## லங்கா ஐ. ஓ. சி. அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 18

லங்கா ஐ. ஓ. சி நிறுவனத்தால், விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்படும் எரிபொருளின் அளவில், 10 வீதத்தை உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளுக்கு வழங்க தீர்மானித்துள்ளதாக, லங்கா ஐ. ஓ. சி எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலைமையை கருத்தில்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் சுசந்த கோசல விதானாராச்சி தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில், லங்கா ஐ. ஓ. சி நிறுவனம் மாத்திரமே நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியாக எரிபொருளை விநியோகிக்கிறது.

எனவே, அதனை உரிய முறையில் முகாமைத்துவம் செய்யும் பொறுப்பு தங்களுக்கு உள்ளதால், இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக லங்கா ஐ.ஓ.சி எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கத்தின் தலைவர் சுசந்த கோசல விதானாராச்சி தெரிவித்துள்ளார்.

இதேநேரம், வெளிநாட்டு ஒதுக்கம் தொடர்பான பிரச்னையால், எதிர்காலத்தில் எரிபொருள் விநியோகம் தொடர்பில் சிற்சில வரையறைகளை விதிக்க வேண்டி ஏற்படும் என அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு மற்றும் அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி என்பவற்றால், எரிபொருளுக்கான நிதித் தேவையானது கடந்த சில மாதங்களில், 200 மில்லியன் டொலரிலிருந்து 600 மில்லியன் டொலர் வரையில் அதிகரித்துள்ளது.

எனவே, சர்வதேச நாணய நிதியம், ஏனைய அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் நட்பு நாடுகளுடன் கொடுக்கல் வாங்கல்களின் மூலம், நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் வழமைக்கு கொண்டுவரும் வரையில், சில மாதங்களுக்கு எரிபொருள் பயன்பாட்டை சிற்சில வரையறைகளுக்கு உட்படுத்த வேண்டிய நிலை உள்ளது.

பேருந்துகள் மற்றும் தொடருந்துகளுக்கு வரையறையின்றி, எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எனினும், தனிப்பட்ட ரீதியில் பயன்படுத்தப்படும் ஏனைய அனைத்து வாகனங்களுக்கும், சிற்சில வரையறைகளை விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த வரையறைகள் தொடர்பான தீர்மானத்தை, எரிபொருள் பதிவு நடவடிக்கைகளின் பின்னர், எதிர்வரும் நாட்களுக்குள் அறிவிக்க எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் கூறினார். (ஐ)

# டெங்கு, கோவிட், இன்புளுவன்ஸா சிறுவர்களை தாக்கும் அபாயம்!

கொழும்பு, ஜூலை 18

**டெங்கு, இன்புளுவன்ஸா மற்றும் கொரோனா முதலான நோய்கள் சிறார்க ளிடையே பரவும் அபாயம் உள்ளதாக சுகாதாரத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இந்த நோய் நிலைமைகளுக்கு உள்ளாகும் சிறார்களின் எண்ணிக்கை கடந்த காலத்தில் அதிகரித்துள்ளதாக சிறுவர் நோய் விசேட மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

கோவிட்-19 பரவலானது தற்போதும் சமூகத்தில் உள்ளது. பரிசோதித்து பார்த்தால், அதனை அறிந்துகொள்ளலாம். காய்ச்சல் உள்ளிட்ட நோய் அறிகுறிகள் தென்பட்டால், சில நேரம் இன்புளுவென்சா அல்லது கொரோனா தொற்றாக இருக்கலாம் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

# புதிய முறையில் எரிபொருள் விநியோகம் சாத்தியமற்றது!

## ஹர்ஷ டி சில்வா எம். பி.

கொழும்பு, ஜூலை 18

வாகன உரிமையாளர்களுக்கான கோட்டா முறையின் கீழ் வாராந்தம் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக நேற்று முன்தினம் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம் சாத்தியமற்றது என பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் இந்த விடயத்தை பதிவிட்டுள்ளார்.

கோட்டா முறையின் கீழ் வாராந்தம் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக முன்பதிவு செய்துகொள்வதற்கான



இணையத்தளம் அறிமுகம் செய்யப்பட்டு சில மணித்தியாலங்கள் ஆகியும், பலமுறை முயற்சித்தும் உரிய இணையத்தளத்தின் ஊடாக பதிவு செய்யமுடியவில்லை - என்றும் அவர் கூறினார். (ஐ)

# பூசையில் வைத்து எடுத்த ரூ. 10 இலட்சம் வழிப்பறி!

## யாழ். நகரப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

தொழிலில் முதலீடு செய்வதற்காக ஆலய பூசையில் வைத்து எடுத்த 10 இலட்ச ரூபாய் பணத்தை இருவர் வழிப்பறி செய்துவிட்டு தப்பி சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் கோட்டை முனியப்பர் ஆலயம் முன்பாக நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

யாழ்ப்பாணத்தை சேர்ந்த நபர் ஒருவர் தனது புதிய தொழில் முதலீட்டுக்காக 10 இலட்சம் ரூபாயை ஆலய பூசையில் வைத்து எடுத்துத் தருமாறு பூசகரிடம் வழங்கியுள்ளார்.

அவரின் வேண்டுதலின் பிரகாரம் பூசகரும் அந்தப் பணத்தை பூசையில் வைத்து எடுத்துக் கொடுத்துள்ளார். பூசகரிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு ஆலயத்தை விட்டு வெளியில் வருவதற்கு முன்னதாக அங்கு நின்றிருந்த இருவர் அந்தப் பணத்தைப் பறித்துக் கொண்டு அங்கிருந்து தப்பியோடினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# கொரோனா தொற்று நாளாந்தம் உயர்கிறது

கொழும்பு, ஜூலை 18

நாளாந்தம் பதிவாகும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்து வருகிறது என்று சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

கடந்த நாட்களில் நாளாந்தம் சுமார் 10 நோயாளர்கள் பதிவான நிலையில், தற்போது நாளாந்தம் 25 கொரோனா நோயாளர்கள் பதிவாகின்றனர் என்று அமைச்சின் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் கூறினார்.

இதன் காரணமாக சுகாதார வழிமுறைகளை கடைப்பிடிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ஐ)

# ஜனாதிபதி பதவிக்கு ரணிலே பொருத்தம்!

## அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 18

"இடைக்கால ஜனாதிபதிப் பதவிக்குத் தற்போது பதில் ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவே பொருத்தமானவராக இருப்பார் என நான் நம்புகின்றேன்." -

இவ்வாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று தனியார் வானொலி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)



# வீரமாகாளி அம்மன் ஆலயத்தால் உலருணவு பொதிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தொண்டர் சபையினர் மற்றும் கனடா வாழ் தொண்டர்கள் இணைந்து உதவி தேவைப்படும் 200 பயனாளிகளுக்கான உலர் உணவுப் பொருட்களை நேற்று வழங்கி வைத்தனர்.

வீரமாகாளி அம்பாள் ஆலயத்தின் மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல் ஸ்ரீலஸ்ரீ ஞான சம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் பங்கேற்றார்.

இதன்போது, நல்லூர் பிரதேச செயலகத்தினால் தெரிவு செய்யப்பட்ட 200 பயனாளிகளுக்கு தலா 5 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. (ஐ-3)

# ஜனாதிபதி தெரிவில் ரணிலுக்கு ஆதரவு பெரமுன கட்சிக்குள் வலுக்கும் எதிர்ப்பு!

கொழும்பு, ஜூலை 18

சிறீ லங்கா பொதுஜன பெரமுன பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் தீர்மானத்தை எடுக்கவில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் டொலவத்தை தெரிவித்துள்ளார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் நாயகம் சாகர காரியவசம் தனது தனிப்பட்ட விருப்பத்துடன் கட்சியின் விருப்பத்துடன் கலந்து கொண்டுள்ளார் என்றும் அவர் சாடினார்.

பதில் ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பது தொடர்பில் சிறீ லங்கா பொதுஜன பெரமுன எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

எம். பிக்கள் தேர்தலில் சுயேச்சையாக வாக்களிப்பார்கள் என்பதால், குறிப்பிட்ட வேட்பாளருக்கு வாக்களிக்க எந்த ஒரு தனி நபரும் கட்சி உறுப்பினர்களை பாதிக்க முடியாது என்றும் அவர் வலியுறுத்தினார். (ஐ)



## குரக்கன் பயிர்ச் செய்கையில் வலிகாமம் விவசாயிகள் ஆர்வம்!

யாழ்ப்பாணம், ஜூலை 18

வலிகாமம் பகுதியில் குரக்கன் செய்கையில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருவதை அவதானிக்க முடிகின்றது.

நாட்டில் தற்போது கடுமையான பொருளாதார நெருக்கடி நிலவி வரும் நிலையில் எதிர்காலத்தில் பெருமளவு உணவு நெருக்கடியும் ஏற்படக் கூடும் எனத் துறைசார் வல்லுநர்களால் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் உணவு நெருக்கடி ஏற்படும் பட்சத்தில் தமது உணவுத் தேவையைத் தாமே ஈடு செய்யும் வகையில் எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியிலும் விவசாயிகள் இவ்வாறு குரக்கன் செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

குறிப்பாக, கட்டுவன், குப்பிழான், ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், ஈவினை, சுன்னாகம், அச்செழு, ஊரெழு, உரும்பிராய், உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் குரக்கன் செய்கையில் பரவலாக ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பல மருத்துவமனைகள் நாட்டில் மூடப்பட்டன!

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

**கொழும்பு, ஜூலை 17**

**எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நாட்டில் பல மருத்துவமனைகள் மூடப்பட்டுள்ளன என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இதுவரையில் எந்தவொரு வேலைநிறுத்தத்திலும் கலந்து கொள்ளாத சிறுவர் வைத்திய சாலையும் பணிப்புறக்கணிப்புக்கு தயாராகி வருகிறது என்று அதன் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட மருத்துவர் ஹரித அலுத்கே மேற்படி விடயங்களைத் தெரிவித்தார்.

இதேவேளை, பொலநறுவை மாவட்டத்தில் சகல வைத்தியசாலைகளிலும் அவசர சிகிச்சை பிரிவை மட்டும் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, பொது மருத்துவமனை, 3 ஆதார மருத்துவமனைகள், 9 பிரதேச மருத்துவமனைகளில் நேற்று முன்தினம் தொடக்கம் அவசர சிகிச்சைப் பிரிவு மட்டுமே முன்னெடுக்கப்படுகின்றது என்றும் அறிய வருகின்றது. (ஐ)

## நீர் வெறுப்பு நோயால் 6 மாதங்களில் 12 பேர் பலி!

### சுகாதார அமைச்சு தகவல்

கொழும்பு, ஜூலை 18

கடந்த ஆறு மாதங்களில் மட்டும் 12 பேர் நீர்வெறுப்பு நோயால் (விசர் நாய்க்கடி நோயால்) உயிரிழந்தனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பொது சுகாதார கால்நடை சேவை பணிப்பாளர் மருத்துவர் எல். டி. கித்சிறி இது தொடர்பாக மேலும் கூறுகையில், -95 வீதமான நோய்த் தொற்றுகள் நாய் கடிப்பதால் ஏற்படுகின்றன. நாய்க்குட்டிகள் மூலம் குறித்த நோய் பரவி அதிக ஆபத்தை ஏற்படுத்துகிறது.

கடந்த ஆறு மாதங்களில் 5 இலட்சம் நாய்களுக்கு இலவசமாக தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. 30 ஆயிரம் தெரு நாய்களுக்கு கருத்தடை செய்து அவற்றின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தி உள்ளோம்.

அத்துடன், நாட்டில் 20 முதல் 30 மில்லியன் நாய்கள் உள்ளன. இருப்பினும் ஆண்டுக்கு சுமார் 11 இலட்சம் நாய்களுக்கு மட்டுமே தடுப்பூசி போடப்படுகிறது. 70 வீதமான நாய்க்குட்டிகளுக்கு தடுப்பூசி போடப்படுவதன் மூலம் குறித்த நோய் பரவுவதை குறைக்க முடியும் நீர்வெறுப்பு நோயால் வருடாந்தம் 20 தொடக்கம் 30 வரையான மரணங்கள் ஏற்படுகின்றன.

வருடம் தோறும் ஆறு வாரங்களுக்கு மேல் உள்ள அனைத்து நாய்களுக்கும் விசர் நாய் கடி தடுப்பூசி போடுமாறு அமைச்சகம் பரிந்துரைத்துள்ளது. விசர்நாய் கடிக்கு எதிராக நாய்களுக்கு தடுப்பூசி போடாததும் மற்றும் நாய் கடித்த பின்னர் உரிய நேரத்தில் சிகிச்சை பெறாததும் இறப்புக்கான முக்கிய காரணங்களாகும்.

விலங்கு கடித்த உடன் சிகிச்சை அளிக்கப்பட்டால் 100வீதம் குறித்த நோயில் இருந்து முழுமையாக குணமடைய முடியும். விசர் நாய் கடிக்கான (நீர்வெறுப்பு நோய்) தடுப்பூசிகள் அரசாங்க மருத்துவமனைகளில் இலவசமாக பெற முடியும் - என்றார். (ஐ)

## மக்கள் நிலைப்பாடு என்னவென்று ஆட்சியாளருக்கு புரிய வேண்டும்!

### முஜிபுர் ரஹ்மான் எம். பி.



கொழும்பு, ஜூலை 18

மக்களின் நிலைப்பாடு என்ன என்பதை ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனை தெரிவித்தார்.

அத்தியாவசிய சேவைகளை நிறைவேற்றாமல் மக்களின் வாழ்க்கையுடன் விளையாடுவதற்கு எதிர்பார்த்திருப்பார்களாயின் வீதிக்கு இறங்கி ஆட்சியாளர்களை வெளியேற்றுவதற்கு பின்வாங்கப்போவதில்லை என்பதை நாட்டு மக்கள் கடந்த 9ஆம் திகதி முன்னெடுத்த ஆர்ப்பாட்டம் ஊடாக அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

இந்த செய்தியானது கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மட்டும் விடுக்கப்பட்ட செய்தியல்ல. சிறீ லங்கா பொதுஜன பெரமுனவில் உள்ள சகலருக்கும் விடுக்கப்பட்ட செய்தியாகும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## 15 இலட்சம் பேர் வேலை இழப்பு!

கொழும்பு, ஜூலை 18

தற்போது நிலவும் நெருக்கடி நிலைமை காரணமாக நிர்மாணப் பணிகள் முற்றாக தடைப்பட்டுள்ளன என்று இலங்கை தேசிய கட்டட தொழிலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நிர்மாணப் பணிகள் தடைப்பட்டமையால் நாடு முழுவதும் சுமார் 15 இலட்சம் ஊழியர்கள் தொழிலை இழந்துள்ளதாக சங்கத்தின் தலைவர் எம். டி. போல் தெரிவித்துள்ளார். (ஐ)

## பூநகரியில் மூடிய பாடசாலைகளை மீளவும் திறக்குமாறு கோரிக்கை!

கிளிநொச்சி, ஜூலை 18

பூநகரி கல்விக் கோட்டத்தில் மூடப்பட்டுள்ள 6 பாடசாலைகளை திறப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி. சிறிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

1990ஆம் ஆண்டிற்குப் பின்னர் பூநகரியின் பல கிராமங்கள் உவரடைந்தமை, போர் நெருக்கடி, இடப் பெயர்வுகள் காரணமாக தற்போது வரை 6 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

2010ஆம் ஆண்டிற்குப் பின்னர் மீள் குடியேற்றத்துடன் இந்தப் பாடசாலைகளை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. தற்போது பூநகரி கல்விக் கோட்டத்தில் உள்ள 24 பாடசாலைகளில் 6 பாடசாலைகள் மூடப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றன.

பொன்னாவெளி சைவப் பிரகாச வித்தியாலயம், பல்லவராயன்கட்டு இந்து கலவன் பாடசாலை, தம்பிராய் அ.த.க.பாடசாலை, கௌதாரிமுனை அ.த.க.பாடசாலை, அத்தாய் முத்துக்குமாரசாமி வித்தியாலயம், செட்டியகுறிச்சி பாடசாலை என்பன தற்போது மூடப்பட்டுள்ள நிலையில் காணப்படுகின்றன.

பூநகரியில் ஏற்பட்ட உவர்ப் பரம்பல் காரணமாக பொன்னாவெளி, பல்லவராயன் பாடசாலைகள் மூடப்பட்டன. ஏனைய பாடசாலைகள் போர், இடப்பெயர்வுகள் காரணமாக மூடப்பட்டுள்ளன.

இப்பாடசாலைகளை இயக்குவதற்கு போதியளவு மக்கள் தொகை கிராமங்களில் காணப்படவில்லை என்பதே கல்வி அதிகாரிகளின் கருத்தாக காணப்படுகின்றது. பூநகரி கல்விக் கோட்டத்திற்குள் மக்கள் செறிந்து வாழும் இடங்களில் பாடசாலைகளை இயக்கலாம் என்பது மக்களின் கருத்தாக உள்ளது.

கடந்த வாரம் தனியான கோட்டக் கல்வி அலுவலகமும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மூடப்பட்டுள்ள பாடசாலைகளை இயங்க வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பிரதேச சபையின் தவிசாளர் தெரிவித்தார். (ஐ)

## மாவட்ட செயலகம் பொறுப்பற்ற செயல்; சுகாதார உத்தியோகத்தர்கள் பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்ப்பாணத்தில் சுகாதாரப் பணியாளர்களுக்கான எரிபொருள் விநியோகம் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். முற்றவெளிப் பகுதியில் உள்ள யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிலையம் ஊடாக விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அது திடீரென சுன்னாகத்தில் உள்ள எரிபொருள் நிலையம் ஒன்றுக்கு மாற்றப்பட்டமை குறித்து சுகாதாரப் பணியாளர்கள் கடும் விசனம் வெளியிட்டனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சுகாதாரப் பணியாளர்களுக்கு யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையம் ஊடாக எரிபொருள் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனை அடுத்து சுகாதாரப் பணியாளர்கள் அங்கு கூடியிருந்தனர். ஆயினும், பின்னர் அது சுன்னாகத்தில் உள்ள தனியார் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றுக்கு யாழ். மாவட்ட செயலகத்தால் மாற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டு எரிபொருள் விநியோகம் இடம்பெற்றது. இதனால் தீவகப் பகுதிகளில் இருந்து எரிபொருள் பெற வந்த சுகாதாரப் பணியாளர்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

இறுதி நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையால் தாம் கடும் சிரமங்களுக்கு உள்ளானதாகவும் தமது மோட்டார் சைக்கிள்களை சுன்னாகத்துக்கு கொண்டு செல்ல எரிபொருள் இல்லாமல் சிரமங்களை எதிர்கொண்டனர் எனவும் அவர்கள் குற்றம் சாட்டினர். (ஐ)

# இலவச சுகாதாரம், கல்வி குறித்து ஐ. எம். எவ். நிபந்தனை விதிக்கலாம்!

## சீனாவுக்கான இலங்கை தூதுவர் பாலித



பீஜிங், ஜூலை 18

**இலவச சுகாதாரம், இலவச கல்வி என்பவற்றுக்காக அரசாங்கம் அதிகம் செலவிடும் நிதியை குறைக்குமாறு சர்வதேச நாணய நிதியம் (ஐ. எம். எவ்.) நிபந்தனைகளை விதிக்கலாம் என்று சீனாவுக்கான இலங்கை தூதுவர் பாலித கொஹண தெரிவித்துள்ளார்.**

சீனாவின் குளோபல் ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்துள்ள நேர்காணலிலேயே கொஹண மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையின் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைளில் ஆசிய அபிவிருத்தி வங்கியும் உலகவங்கியும் அதிகளவு பங்களிப்பை வழங்க வேண்டும். கடன்நிவாரணம் தொடர்பில் இலங்கையும் சர்வதேச நாணயநிதியமும் இன்னமும் ஆரம்பகட்ட இணக்கப்பாட்டுக்கு வரவில்லை. இலங்கைக்கு அதிகளவு கடன் வழங்கியுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியும் உலகவங்கியும் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைளை துரிதப்படுத்தக்கூடிய திட்டமொன்றை முன்வைக்க வேண்டும் என கோரப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேசமயம், அதிகரிக்கும் ஆர்ப்பாட்டங்கள் அத்தியாவசிய பொருட்கள் பற்றாக்குறை அவசரகாலநிலைமை பிரகடனம் போன்ற தொடரும் நிலைமைகளுக்கு மத்தியில் கடனில் சிக்கியுள்ள நாட்டிற்கு அதன் சகாக்கள் மேலும் உதவிகளை வழங்கவேண்டும்.

கடந்த மாத இறுதியில் சர்வதேச நாணயநிதியம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டது. எங்களுக்குக் கிடைத்த அறிக்கைகளின்படி பேச்சுக்கள் திருப்திகரமானமுறையில் இடம்பெற்றுள்ளன. நாங்கள் லண்டனில் சட்டஆலோசகர்களை நியமித்துள்ளோம், கடன் மறுசீரமைப்பு குறித்து புரிந்து கொள்ளக்கூடிய மேற்குலக நிபுணர்களையும் நாங்கள் நியமித்துள்ளோம்.

ஆனால், சர்வதேச நாணயநிதியத்துடனான பேச்சுக்கள் ஆரம்பகட்டத்திலேயே உள்ளன. புதிய அரசாங்கம் பதவியேற்றதும் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகளுக்கான புதிய ஏற்பாடுகள் இடம்பெறும். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் விதிமுறைகள் பாரமானதாக இருக்காது.

சர்வதேச நாணயநிதியம் வரும் ஒவ்வொரு முறையில் எங்களை இறுக்கிகொள்ள வேண்டியது, செலவுகளை கட்டுப்படுத்த - குறைக்க வேண்டியது தவிர்க்க முடியாதது. ஆனால் சில சந்தர்ப்பங்களில் நாங்கள் இறுதிகட்டத்தில் இருப்பதால் இது கடினமானது.

சுகாதார துறைக்கு அரசாங்கம் வழங்கும் நிதியை ( இலவச சுகாதார சேவை) குறைக்குமாறு சர்வதேச நாணய நிதியம் வேண்டுகோள் விடுக்கலாம் என நாங்கள் கவலை கொண்டுள்ளோம். இதே போன்று இலவசக் கல்வி குறித்தும் சர்வதேச நாணயநிதியம் பரிந்துரைகளை முன்வைக்கலாம் இது மேலும் அமைதியின்மையை ஏற்படுத்தலாம்.

உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற சர்வதேச நிதியமைப்புகளே இலங்கைக்கு அதிகளவு நிதியை வழங்கியுள்ளன. வோல்சிறீட் போன்றவையும் குறிப்பிடத்தக்க முதலீடுகளை செய்துள்ளன. இந்த நிதியமைப்புகள் அதிகளவு பங்களிப்பை வழங்க வேண்டும். இலங்கை எதிர்கொண்டுள்ள நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இருதரப்பு நிதிஉதவி வழங்குபவர்களும் உதவிகளை வழங்குவார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும், எந்த அரசாங்கம் பதவியேற்றாலும் அது சீனாவுடன் சிறந்த உறவை பேணும். சீனா இலங்கையின் முக்கிய வர்த்தக சகா முதலீட்டாளர் இரு நாடுகளுக்கும் இடையில் மூலோபாய உறவுகள் உள்ளன. தேர்தலுக்குப் பின்னர் பதவியேற்கும் எந்த அரசாங்கமும் சீனாவின் நம்பிக்கையையும் சீன மக்களின் நல்லெணத்தையும் பெறும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# ஜனாதிபதி தெரிவு வாக்களிப்பு; எம். பிக்களுக்கு கொலை மிரட்டல்!

## உடனடி நடவடிக்கைக்கு பதில் ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, ஜூலை 18

ஜனாதிபதி தெரிவின்போது, சுதந்திரமாக தமது வாக்குகளைப் பயன்படுத்துவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு காணப்படும் உரிமைக்கு இடையூறு விளைவித்து, சமூக வலைத்தளங்கள் ஊடாக அழுத்தம் பிரயோகிக்கும் நபர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பு பிரிவினருக்கு உத்தரவு வழங்கியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு காணப்படும் அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான சட்டம் உட்பட, அதனுடன் தொடர்புடைய குற்றவியல் சட்டத்தின் அடிப்படையிலும் உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறும் அவர் பணித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் சட்டத்தின் கீழ், அவர்கள் பாராளுமன்றத்துக்கு வருவதற்கும் , திரும்பிச் செல்வதற்கும் சுதந்திரம் உள்ளது. பாராளுமன்றத்துக்கு உள்ளும் சுதந்திரமாக செயல்படு



வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிராக செயல்படுவதானது பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறுவதுடன் அச்சுறுத்தலாகவும் அமையும் வன்முறையைப் பரப்பும் கலகக்காரர்களால் சமூக வலைத்தளங்கள் ஊடாக குறிப்பிட்ட வேட்பாளர்களுக்கு வாக்களித்து விட்டு கிராமத்துக்கு வர வேண்டாம் என்று பதிவிட்டு, அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக பதில் ஜனாதிபதிக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதற்கு முன்னரும் பாராளுமன்ற உறுப்பினர்களின் இல்லங்களுக்கு தீ வைத்து அவற்றை அழித்துள்ளதோடு , பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் கொல்லப்பட்டார். இவற்றை சுட்டிக்காட்டி கலகக்காரர்களால் மறைமுகமாக கொலைமிரட்டல் விடுக்கப்படுகிறது என்று பதில் ஜனாதிபதிக்கு பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவ்வாறு கொலை மிரட்டல் விடுக்கப்படுவதால் தமக்கு பாராளுமன்றத்தில் சுதந்திரமாக வாக்களிக்க முடியாத சூழல் காணப்படுவதாகவும் பதில் ஜனாதிபதியிடம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய இவை தொடர்பில் துரித விசாரணைகளை முன்னெடுக்குமாறு பதில் ஜனாதிபதி பாதுகாப்பு தரப்பினருக்கு உத்தரவிட்டுள்ளார். ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக வாக்களிக்கும் போது , ஒரு பாராளுமன்ற உறுப்பினரால் பிறிதொருவருக்கு அச்சுறுத்தல் மற்றும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டால் , நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டத்தின் பிரகாரம் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதலாவது அமைச்சரவை கூட்டத்திலும் தெரிவித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அரச சொத்துக்களுக்கு ஏற்படுத்திய சேதங்களை மதிப்பிட நடவடிக்கை!

கொழும்பு, ஜூலை 18

ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை உள்ளிட்ட கொழும்பில் உள்ள ஏனைய அரச சொத்துக்கள் மீதான சேத விபரம் தொடர்பில் கணக்காய்வு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி பதவியிலிருந்து விலகுமாறு கோரி நாட்டின் பல பாகங்களிலும் மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் நடைபெற்று வந்தன.

இந்நிலையில், கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகையிலிருந்து முன்னாள் ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ சென்றதையடுத்து , பொது மக்கள் பலரும் ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரி மாளிகை ஆகியவற்றை முற்றுகையிட்டனர்.

அங்கு இலட்சக் கணக்கான மக்கள் நுழைந்ததால், சன நெரிசலில் அங்குள்ள சில பொருட்களுக்கு சேதங்கள் ஏற்பட்டன என்று கூறப்படுகிறது.

ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் உள்ளிட்ட கட்டடங்களின் சொத்துக்கள் மீதான கணக்காய்வு நடவடிக்கையை ஆரம்பிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரி மாளிகையின் பல பழங்கால சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன என்று தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள்மீது தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மாணவிகளை நிர்வாணமாக படம் எடுத்த ஆசிரியர் கைது!

கொழும்பு, ஜூலை 18

உயர்தர வகுப்புகளில் கலந்துகொண்ட நான்கு மாணவிகளின் நிர்வாண படங்களை எடுத்த சம்பவம் தொடர்பில், மேலதிக வகுப்புகளை நடத்தும் பாடசாலை ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்திற்குரிய ஆசிரியர் றம்பொடகலை மற்றும் மாவத்தகம பிரதேசங்களில் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருபவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நான்கு மாணவிகளையும் அவ்வப்போது காரில் ஏற்றிச் சென்றார் என்றும், மேலதிக பாடம் கற்றுத் தருவதாகக் கூறி மாணவிகளின் நிர்வாணப் படங்களை எடுத்தார் என்று மாணவிகள் பொலிஸில் முறைப்பாடு தெரிவித்தனர்.

சந்தேகநபரின் கைபேசி பறிமுதல் செய்யபட்டுள்ளது. அதில், மாணவிகளின் நிர்வாண படங்கள் இருப்பதும் கண்டறியப்பட்டது. சந்தேகநபரை நீதிமன்றில் முற் படுத்த பொலிஸார் நடவ டிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# தென் சீனக் கடலில் சீன ஆதிக்கமும்...



# பசிபிக் தீவுகளில் அமெரிக்கா காலூன்றதலும்..

பசிபிக் பிராந்திய தீவுகளில் அமெரிக்கா ஒரு புதிய அத்தியாயத்தை திறக்க முனைகிறதா ? அல்லது பசிபிக் தீவுகளில் சீனாவின் ஆதிக்கத்தை அமெரிக்கா குறைக்க முடியுமா என்பதே கடந்த வாரம் ஜூலை 13 அன்று பசிபிக் தீவுகள் மன்றத்தில் அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் ஆற்றிய உரையின் தொனிப் பொருளாக அமைந்தது.

**பசிபிக் தீவுகள் மன்றம்**
**(Pacific Islands Forum)**

கடந்த வாரம் ஜூலை 13 அன்று பசிபிக் தீவுகள் மன்றத்தில் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் ஆற்றிய உரையானது பசுபிக் உடனான அமெரிக்காவின் நீண்ட உறவில் அமெரிக்கா ஒரு "புதிய அத்தியாயத்தை" தொடங்குவதாக குறிப்பிட்டார்.

பிஜி நாட்டு தலைநகர் சுவாவில் நடைபெற்ற பசிபிக் தீவுகள் மன்றத்தின் தலைவர்கள் கூட்டத்திற்காக, ஆஸி பிரதம மந்திரி அந்தோனி அல்பானீஸ் ஜூலை 13 புதன்கிழமை பிஜிக்கு சென்றார். 2019 ஆம் ஆண்டின் பின் நடைபெறும் தலைவர்கள் இக்கூட்டம் பசிபிக் ஒற்றுமை, காலநிலை மாற்றம், பிராந்திய பாதுகாப்பு மற்றும் கோவிட்-19 இலிருந்து பொருளாதார மீட்சி உள்ளிட்ட முக்கிய விஷயங்களை விவாதிக்க பசிபிக் தலைவர்களை ஒன்றிணைத்தது. இம் மன்றம் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஒன்றுகூடி வருகிறது.

**சீனாவின் தென் சீன கடல் ஆதிக்கம்:**

தென் சீன கடலோரப் பகுதியில் உள்ள வளங்களைக் கைப்பற்றுவதற்கு சீனா நாட்டம் காட்டுவதாக அமெரிக்க குற்றம் சாட்டி வருகிறது. அத்துடன் எரிசக்தி வளம் மிகுந்திருக்கும் வாய்ப்புள்ள சர்ச்சைக்குரிய நீர் எல்லைப் பகுதியை கட்டுப்படுத்துவதற்கு அடாவடித்தனமான செயல்களில் ஈடுபடும் சீனாவின் செயல்பாடுகளுக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.

செயற்கையாக உருவாக்கப்பட்ட தீவுகள் பகுதியில் பல ஆண்டுகளாக சீனா ராணுவ தளங்களை உருவாக்கி வருவதும், சர்வதேச சட்டத்தை வெளிப்படையாக சிதைக்கும் முயற்சி என்றும் அமெரிக்கா கூறியுள்ளது.

இதனால் சீனாவுக்கும் வேறு பல நாடுகளுக்கும் இடையில் உறவுகள் மோசமடைந்து வரும் நிலையில், இந்த விஷயத்தில் ஏதும் நடவடிக்கை எடுப்பதாக இருந்தால், தன்னுடைய நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு அமெரிக்கா எந்த மாதிரியான புதிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

தெற்கு சீன கடல் பகுதியில் ஏறத்தாழ முழுமையுமே தங்களுக்குச் சொந்தமானது என்று சீனா உரிமை கோருவதை புருனே, மலேசியா, பிலிப்பின்ஸ், தாய்வான், வியட்நாம் ஆகிய நாடுகள் எதிர்த்து வருகின்றன. பல தசாப்த காலமாக அந்த எல்லைகள் குறித்த பிரச்சினை, இந்த நாடுகளுக்கு இடையே இருந்து வருகிறது. சமீப ஆண்டுகளாக அங்கு தொடர்ந்தும் பதற்றம் அதிகரித்து வருகிறது.

பசிபிக் தீவுகள் மன்றத்தில் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் ஆற்றிய உரையிலும் பசிபிக் பிராந்தியத்தில் சமீபத்திய சீனாவின் கடல் ஆதிக்க விடயம் பற்றியே கண்டனம் தெரிவித்தார்.

**பசுபிக்கில் ரஸ்ய மேலாதிக்கம்:**

1980 களின் நடுப்பகுதியில், பசிபிக் பகுதியில் சோவியத் - ரஸ்ய செயல்பாடுகளும் , சீனா மீன்பிடித் தளங்களை அமைப்பது என்ற போர்வையில் கடலாதிக்கம் செலுத்தியது. இதனாலேயே அமெரிக்கா பசுபிக்கில் நடவடிக்கை எடுக்கத் தூண்டியதாக துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் அவரின் பேச்சு உணர்த்தியது.

பசிபிக் தீவுகளில் அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளான பிரான்ஸ், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் ஜப்பானின் இருப்பை உறுதி செய்வதன் மூலம் புவிசார் மூலோபாய போட்டியைத் தடுத்து நிறுத்தும் என வாஷிங்டன் நம்புகிறது.




அன்றைய காலகட்டத்தில் பசிபிக் மேலாதிக்கத்திற்கான சோவியத் ஒன்றியத்தின் போட்டியானது, சோவியத் யூனியனின் சரிவின் பின்னர் பாரிய அழுத்தம் தணிந்ததாக கருதப்படுகிறது.

1980 இல் இம்மன்று நிறுவப்பட்டதிலிருந்து 11 முறை பசிபிக் தீவுகளின் மாநாடு நடைபெற்றபோதிலும் இம்முறை அதிக கவனத்தை ஈர்த்தது.

சுமார் மூன்று தசாப்தங் களாக பசிபிக் தீவுகள் பிராந்தி யத்துடனான தமது உறவுகளின் மூலக்கல்லாக இது உள்ளது என்று கமலா ஹாரிஸ் தனது உரையில் எதிரொலித்தார்.

1980களின் மத்தியில் மார்ஷல் தீவுகள், மைக்ரோனேசியாவின் கூட்டாட்சி மாநிலங்கள் மற்றும் பலாவ் குடியரசுகளுக்கு அபிவிருத்து நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா நிதியளித்தது. மற்றும் அமெரிக்காவில் தங்கள் குடிமக்களுக்கு வேலை மற்றும் வதிவிட உரிமைகளை அனுமதித்தது. இது அமெரிக்கா முழுவதும் ஏராளமான புலம்பெயர் சமூகங்களின் வளர்ச்சியைத் தூண்டியது. மாற்றாக, அமெரிக்கா அவர்களின் கடல் பிரதேசங்களின் மீது கட்டுப்பாட்டை உறுதி செய்ததும் உண்மையே.

ஆனால் 2020களில் இருந்து சீனாவுடன் வளர்ந்து வரும் ஆதிக்கப் போட்டியால் வெள்ளை மாளிகையை மேலதிக நடவடிக்கைக்கு பசுபிக்கில் தூண்டியுள்ளதை காணலாம்.

பசிபிக் தீவுகளின் பாரம்பரியத்தைச் சேர்ந்த சுமார் 1.4 மில்லியன் மக்கள் அமெரிக்காவில் வசிக்கிறார்கள்.

கமலா ஹாரிஸ் தனது உரையில், அமெரிக்காவை தளமாகக் கொண்ட பசிபிக் தீவுவாசிகளின் பெரும்பகுதி வசிக்கும் கலிபோர்னியாவில் இந்த சமூகங்கள் தேசத்திற்கு செய்யும் எண்ணற்ற மற்றும் முக்கியமான பங்களிப்புகளை நன்கு அறிந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவில் பசிபிக் புலம் பெயர்ந்தோர் அமெரிக்காவிற்கு ஒரு மகத்தான சொத்து என்றும் இந்த சமூகங்களின் மேம்பட்ட நல்வாழ்வை உறுதிசெய்ய வாசுங்டன் அரசு முனைவதாகவும் குறிப்பிட்டார்.

**அமெரிக்கத் தூதரை நியமித்தல்:**

கமலா ஹாரிஸ் தனது உரையில் பசிபிக்கில் அமெரிக்கா இருப்பை உயர்த்துவது குறித்தும் விவரங்களை கோடிட்டுக் காட்டினார். பசிபிக் தீவுகள் மன்றத்திற்கான அமெரிக்கத் தூதரை நியமித்தல், பிராந்தியத்தில் அமைதிப் படை நடவடிக்கைகள் மீண்டும் தொடங்குதல், சுவாவில் ஒரு பிராந்திய பணியை நிறுவுதல், மற்றும் டோங்கா மற்றும் கிரிபாட்டியில் இரண்டு புதிய தூதரகங்களை நிறுவுதல் பற்றியும் அவர் குறிப்பிட்டார்.



பசிபிக் தீவு நாடுகளின் முதன்மையான பிரச்சனைகளான கடல் ஆரோக்கியம், காலநிலை தணிப்பு மற்றும் பொருளாதார பின்னடைவு ஆகியவற்றில் கணிசமான புதிய பங்களிப்பையும் கமலா ஹாரிஸ் கோடிட்டுக் காட்டினார்.

இந்த பசுபிக் பிராந்தியத்துடன் சீனா தொடர்பு கொள்ளும் விதத்தைப் பற்றிய மறைமுகமாக கமலா ஹாரிஸ் சாடினார். 75 ஆண்டுகளுக்கும் மேலாக பசிபிக்கில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை அமெரிக்கா வழங்கியுள்ளது என்றும், பசிபிக் பகுதியில் விதிகளை அடிப்படையாகக் கொண்ட ஒழுங்கை வலுப்படுத்த வேண்டும் என பேசினார்.

பப்புவா நியூ கினியாவுடன் போகன்விலாவின் சுதந்திரப் போர் தொடர்ந்தது. இது ஒரு தசாப்த காலமாக (1988-1998) பொங்கி எழுந்த மோதலால் இத்தீவில் இருந்த சுமார் 20,000 பேர் அவரை உயிரிழந்தனர். இந்த மோதலின் தீர்வு, போகன்விலா என்ற தன்னாட்சி மாகாணத்தை இப்பகுதியில் புதிய சுதந்திர நாடாக மாற்றியுள்ளது. அதன் தற்போதைய ஜனாதிபதி, இஸ்மாயில் டோரோமா, போகன்விலா புரட்சிகர இராணுவத்தின் முன்னாள் தளபதியும் ஆவார்.

மேற்கு பப்புவாவிற்கும் இந்தோனேசியாவிற்கும் இடையே தொடர்ந்து மோதல் உள்ளது. சீனாவுடனான போட்டி மற்றும் இந்தோனேசியாவுடனான வலுவான உறவுகளின் தேவை ஆகியவை மேற்கு பப் புவா தொடர்பாக பசிபிக் தீவுகள் மன்றம் நீண்டகாலமாக முயன்று வருகிறது.

சாலமன் தீவுகள் கடந்த ஏப்ரல் 2022 இல் சீனாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டமை அமெரிக்கா, ஆஸ்திரேலியாவை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

ஜப்பானின் முன்னாள் பிரதம மந்திரி அபே ஷின்சோவின் படுகொலையுடன் உலகம் போராடிக் கொண்டிருக்கும் ஒரு வாரத்தில், பலாவ் ஜனாதிபதி ஹருவோ ரெமெலிக் 1985 இல் படுகொலை செய் யப்பட்டதையும் இக் கூட்டத்தில் நினைவு கூரப்பட்டது.

1995 வரை பிரெஞ்சு அரசின் அணு ஆயுத சோதனை நடத்தப்பட்ட நியூ கலிடோனியா, பிரெஞ்சு ஆட்சிக்கு எதிராக ஒரு கொடூரமான சுதந்திரப் போரை அனுபவித்தது. இது 2021 டிசம்பரில் நடைபெற்ற சமீபத்திய மூன்றாவது வாக்கெடுப்பின் மூலமும் தொடர்ந்து பிரான்சிய அரசுக்குள் வாழ எதிரொலித்தது.

2006 ஆம் ஆண்டு முதல் பசிபிக் பகுதியில் சீனா தனது செல்வாக்கை விரிவுபடுத்தியதுடன், பசிபிக் பகுதியில் கணிசமான முதலீட்டையும் செய்துள்ளது. பசிபிக் உடனான அமெரிக்க உறவின் வலுவான அடித்தளத்தை மீள உருவாக்க கமலா ஹாரிஸ் வேண்டினார்.

**தென் சீன கடல் சர்ச்சை பின்னணி:**

மக்கள் வசிக்காத தீவுக் கூட்டங்களில், பாரசெல்ஸ் மற்றும் ஸ்பிராட்லி என்ற இரண்டு தீவுகளின் மீது உரிமை கோருவதில் சீனாவுக்கும், மற்ற நாடுகளுக்கும் இடையில் சமீப காலமாக பதற்றங்கள் அதி கரித்தது. கடல் எல்லையில் பெரும் பகுதி தங்க ளுச் சொந்தம் என்று சீனா உரிமை கோருகிறது. பல நூறாண்டுகளாக தங்க ளுக்கு அந்த உரிமை இருப் பதாக சீனா கூறுகிறது.

இந்தப் பகுதியில் சீனாவின் ராணுவம் அதிகரிக்கப்படுவதை நீண்ட காலமாகவே அமெரிக்கா குற்றம் கூறி வந்துள்ளது. இதனால் கடற்பயண சுதந்திரத்தின் நோக்கம் பற்றிய கருத்துகளால் சீனா தொடர்ந்து கோபம் அடைந்து வருகிறது.

இந்த தீவுகளில் வளம் மிகுந்த பகுதி களில் போர் ஒத்திகைக்காக சர்ச்சைக் குரிய எல்லையில் வெடிகுண்டு சாதனங்களை சீனா பயன்படுத்தியது. பிராந்திய விவகாரங்களில் அமெரிக்க கடற்படை தலையிடுவதாகவும், மற்றய நாடுகளை தூண்டும் வேலைகளில் ஈடுபடுவதாகவும் முன்னர் சீனா குற்றஞ்சாட்டியுள்ளது.

# ரணிலுக்கு எதிராக திரும்பிய போராட்டம் தீவிரமடையுமா தணியுமா?

- எம். மணிகண்டன்




இலங்கையில் அதிபராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகிய பிறகு போராட்டக்காரர்களின் பார்வை அதிபரின் பொறுப்புகளை ஏற்றிருக்கும் ரணில் விக்கிரமசிங்க மீது திரும்பியிருக்கிறது.

"கோட்டாபய ராஜபக்ஷவைவிட ரணில் விக்கிரமசிங்க மிகவும் கவனமாக உத்திகளை வகுத்துச் செயல்படக் கூடியவர் என்பதால் அதற்கேற்றபடி போராட்டத்தை நாங்கள் நடத்த வேண்டியிருக்கிறது" என்கிறார் காலி முகத்திடல் போராட்டத்தில் முன்வரிசையில் நிற்கும் ஒருவர்.

புதிய அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்கான சூழல் ஏற்பட்டிருக்கும் நிலையில், ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக குரல்களை முன்பை விட அதிகமாக காலி முகத்திடல் பகுதியில் கேட்க முடிகிறது.

"ரணில் கோ ஹோம்" என்ற ஆங்கில வாசகம் கொண்ட பட்டைகளை தலையில் கட்டிக்கொண்டு பலர் போராட்டத்தில் பங்கேற்றிருக்கின்றனர். "கோட்டா கோ ஹோம்"என்ற முழக்கம் குறைவாகவே ஒலிக்கிறது. ஆனால் ரணிலுக்கு எதிரான போராட்டம் தீவிரமடையுமா, இல்லை படிப்படியாகத் தணிவதற்கான வாய்ப்பு இருக்கிறதா?

"கோட்டாபய பதவியில் இருந்து வெளியேறி விட்டார். இனி ரணில்தான் எங்களது இலக்காக இருப்பார்" என்றார் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்கும் திவாகரன்.

கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளி யேறி சிங்கப்பூரில் இருந்தபடி தனது பதவியை ராஜிநாமா செய்திருக்கிறார். அவருடைய பொறுப்புகளை தற்காலிகமாக ரணில் விக்கிரமசிங்க கவனித்து வருகிறார். இப்போது கோட்டாபய பதவியின் எஞ்சிய காலத்துக்கு புதிய அதிபரைத் தேர்வு செய்வதற்கான நாடாளுமன்ற வாக்கெடுப்பு வரும் 20-ஆம் திகதி நடைபெற இருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் சஜித் பிரேமதாசவும் அதிபருக்கான போட்டியில் இருப்பதால், ரணில் விக்கிரம சிங்க தன்னிச்சையாக அதிபராவதற்கான வாய்ப்பு இல்லாமல் போயிருக்கிறது. அவர் அதிபராக வேண்டுமானால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப் பினர்களின் ஆதரவைப் பெற்றாக வேண்டும்.

கோட்டாபயவின் பொதுஜனபெரமுன கட்சி ரணி லுக்கு ஆதரவளிப்பதால் அவருக்கு வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு இருப்பதாக நம்பப்படுகிறது.

இப்படியொரு சூழலில்தான் போராட்டக்காரர்கள் ரணிலுக்கு எதிரான போராட்டத்தை நடத்துகிறார்கள்.

"கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்டோர் நாட்டை விட்டு வெளியேறு வதற்கு ரணில்தான் வசதி செய்து கொடுத் தார் என்ற வலுவான சந்தேகம் எங்களுக்கு இருக்கிறது" என்று கூறுகிறார் திவாகரன்.

எனினும் ரணிலுக்கு தீவிர எதிர்ப்பு இல்லையா?

கோட்டாபய ராஜபக்ஷவை நாட்டை விட்டு வெளியேற வைத் திருப்பதும், பதவியில் இருந்து விலகச் செய்திருப்பதும் தங்களுக்கு 99 சதவிகித வெற்றி என்று போராட்டக்காரர்கள் கூறுகிறார்கள்.

"ரணிலை எதிர்த்துப் போராடுவோம். அதே நேரத்தில் கோட்டாபய ராஜபக்ஷவை சிறைக்கு அனுப்பு மாறு வலியுறுத்துவோம்" என்கிறார் காலி முகத்திடல் மேடையில் முழக்கங்களை எழுப்பும் ஒரு பெண்.



ஆயினும் போராட்டக்காரர்கள் தங்கள் வசமிருந்த அரசுக் கட்டடங்களை திருப்பி ஒப்படைத்த பிறகும், கோட்டாபய பதவியில் இருந்து விலகியதாக அறிவித்த பிறகும் போராட்டத்தின் தன்மை சற்று மாறியிருப்பதையே களத்தில் காண முடிகிறது. போராட்டமானது இப்போது பெரும்பாலும் கொண்டாட்ட மாகக் காணப்படுகிறது.

ரணிலுக்கு எதிராக போராட்டக்காரர்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் "தீவிரமான எதிர்ப்பு எண்ணம்" இல்லாததும் இந்த மாற்றத்துக்கு காரணம் என்று போராட்டக்காரர்களில் ஒருவர் கூறினார்.

ரணிலுக்கு எதிரான போராட்டங்கள் நடத்தினாலும், அவரை முழுமையாக ஏற்க முடியாது என்றாலும் மக்களின் மனநிலை எப்படியிருக்கிறதோ அதன்படியே போராட்டத்தை நடத்தி வேண்டியிருக்கும் என்று போராட்டக்காரர்கள் சிலர் கூறினார்கள்.

"ரணிலின் கட்சிக்கு அவரைத் தவிர நாடாளுமன் றத்தில் வேறு உறுப்பினர் இல்லை. சூழ்நிலையைப் பயன்படுத்தி மிகக் கவனமாகத் திட்டமிட்டுக் காய் நகர்த்தி அவர் அதிபர் பதவியை நோக்கி வந்திருக்கிறார். கோட்டாபயவுக்கு ஆதரவாகவும் இருந்திருக்கிறார். ஆனாலும் அவரால் நாட்டை மீட்க முடியும் என்று சிலர் நம்புகிறார் கள்" என்கிறார் ஒரு போராட்டக்காரர்.

இதேபோல் "எல்லோரையும் பதவியில் இருந்து அகற்றிக் கொண்டே இருக்க முடியாது என்ற எண்ணம் எங்களில் சிலருக்கு ஏற்பட்டிருக் கிறது" என்கிறார் ஒரு போராட்டக்காரர்.

காலி முகத்திடல் போராட்டம் இன்று நுாறாவது நாளை எட்டப் போகிறது. அதில் பெரிய அளவிலான கொண்டாட்டங்களை நடத்துவதற்குப் போராட்டக்காரர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். இது போராட்டக்காரர்களின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பதை உணர்த்துவதாக இருக்கக்கூடும்.

# புதிய ஜனாதிபதி கருத்தொருமிப்பின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படவேண்டும்

## வலியுறுத்துகிறது தேசிய சமாதானப் பேரவை

**தே**சிய தேர்தல்களை நடத்தி மக்களிடம் இருந்து புதிய ஆணையைப் பெறக்கூடிய நேரம் வரும்வரை கருத்தொருமிப்பின் அடிப்படையில் புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்யவேண்டியது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களின் கடமையாகும் என்று இலங்கை தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்தியிருக்கிறது.

கலாநிதி ஜெகான் பெரேராவை நிறைவேற்று பணிப்பாளராகக் கொண்ட சமாதானப் பேரவை இது தொடர்பில் சனிக்கிழமை வெளியிட்டிருக்கும் அறிக்கையின் விபரம் வருமாறு:

ஜனாதிபதி கோதாபய ராஜபக்சவின் பதவி விலகல் உறுதிப்படுத்தப்பட்டதை தொடரந்து பாராளுமன்றத்தில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தல் மீதே தற்போது சகலரது கவனமும் திரும்பியிருக்கிறது. இது வழமையான ஒரு நடைமுறை அல்ல. ஆனால், ஜனாதிபதி,பிரதமர் மற்றும் அமைச்சரவையை பதவி விலக நிர்ப்பந்தித்து அவர்களினால் மூன்று வருடங்களுக்கு முன்னர் தேர்தல்களில் பெறப்பட்ட ஆணைகளை வலுவிழக்கச் செய்த "அறகலய" என்று அறியப்பட்ட முன்னென்றும் இல்லாத வகையிலான மக்கள் கிளர்ச்சியின் விளைவான ஒன்றாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக இது அரசியலமைப்பினால் (சரத்து 4) அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட மக்களின் அதிகாரமேயாகும்.

நாட்டை பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் தார்மீக ரீதியிலும் பாழ்படுத்திவிட்ட தனிநபர்களுக்கும் முறைமைகளுக்கும் எதிரான ஒரு மக்கள் கிளர்ச்சியின் கள யதார்த்தங்களை அலட்சியம் செய்து ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஆதரவை திரட்டுவதற்கு மேற்கொள்ளப்படும் பிரசாரங்களும் பேச்சுக்களும் தேசிய சமாதானப் பேரவையை பெரும் கவலையடையச் செய்திருக்கின்றன.

மக்கள் கிளர்ச்சியினால் உண்மையில் வலுவிழக்கச் செய்யப்பட்ட ஆணையொன்றை வைத்துக்கொண்டே புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கான இந்த தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, நாட்டை ஆட்சி செய்வதற்கான தார்மீக நியாயப்பாட்டை இழந்துவிட்ட ஆளும் கட்சியினதும் முன்னாள் அரசாங்கத்தினதும் உறுப்பினர்களுக்கும் இது பொருந்துகிறது.

இத்தகையதொரு சூழ்நிலையில், தேசிய தேர்தல்களை நடத்தி மக்களிடமிருந்து நேரடியாக புதிய ஆணையைப் பெறக்கூடிய நேரம் வரும்வரை கருத்தொருமிப்பின் அடிப்படையில் புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கு தீர்மானிக்கவேண்டியது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களின் கடமை என்று நாம் நம்புகிறோம்.

புதிய ஜனாதிபதி சகல கட்சிகளுடனும் சேர்ந்து பணியாற்றக்கூடியவராகவும் நாட்டில் உள்ள நிபுணர்களுடனும் உள்நாட்டு மற்றும் சர்வதேச நிறுவனங்களுடனும் பணியாற்றக் கூடியவராகவும் எல்லாவற்றுக்கும் மேலாக நாட்டு மக்களுக்கு ஏற்புடையவராகவும் இருக்கவேண்டும் என்றும் நாம் நம்புகிறோம்.


ஆட்சிமுறை என்பது வெறுமனே அதிகாரத்தை செயற்படுத்துவது மாத்திரமல்ல, ஒவ்வொருவரினது உரிமைகளையும் சகலரினதும் நல்வாழ்வையும் பேணிப்பாதுகாப்பதுமாகும்.


ஜனாதிபதி சகல குடிமக்களினதும் குறிப்பாக, மலினப்படுத்தப்பட்டுவிட்ட எதிர்காலத்துக்கு முகங்கொடுக்கவேண்டியவர்களாக இருக்கும் இளைஞர், யுவதிகளின் நம்பிக்கையை பெறவேண்டிய தேவை இருக்கிறது.


அரசியலமைப்புக்கான 21 வது திருத்தச்சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றி சாத்தியமானளவு விரைவாக பாராளுமன்ற தேர்தலுக்கும் மாகாணசபைகள் தேர்தலுக்கும் திகதிகளை நிர்ணயிப்பதே புதிய ஜனாதிபதியின் உடனடிக் கடமைகளாகும்.


# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுகள் எது?





38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?



39. 3 4 3 = 15 இங்கு  ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 



01) **பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..........

ii) "நவீன" என்பதன் எதிர்க்கருத்து யாது? ..........

iii) அஃறிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..........

iv) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..........

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..........

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..........

(6 புள்ளிகள்)

02) அஃறிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

03) **தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..........

(1 புள்ளி)

04) **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

05) **பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

**37. 1** **38. 2** **39. 1** **40. 2**

01. 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

02. விழுகின்றன

03. அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

04. 1) × 2) ✓ 3) × 4) ×

05. ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

---

கல்வி tv CHANNEL-1

**18.07.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**18.07.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# திருமலை பேருந்து நிலைய வழியை மறித்து போராட்டம்!

திருகோணமலை, ஜூலை 17

**திருகோணமலை பிரதான பேருந்து நிலைய நுழைவாயிலை வழிமறித்து தனியார் பேருந்து உரிமையாளர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்**

நேற்று முன்தினம் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு டீசல் வழங்கப்படாமையால் இந்த எதிர்ப்பை வெளிப்படுத்தி வருவதாக தெரிவித்ததுடன், இத்துடன் தாம் மூன்றாவது தடவையாக எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் கூறினர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தனியார் பேருந்துகளுக்கான எரிபொருளை இலங்கை போக்குவரத்து சபையின் சாலைகளில் இருந்து பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுத்திருந்த நிலையில் தமக்கு போதிய அளவிலான எரிபொருள் வழங்கப்படுவதில்லை எனக் கூறியே திருகோணமலை மத்திய பேருந்து நிலையத்தின் நுழைவாயிலை மறித்து தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.



முன்னதாக நாளொன்றுக்கு 2500 லீற்றர் டீசல் வழங்கப்படுவதாக இ. போ. ச. சாலை அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்ட போதிலும் தற்போது நாளொன்றுக்கு 750 லீற்றர் டீசலே வழங்கப்படுவதாகவும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், இந்த டீசலை பெற்றுக் கொள்வதற்கு பல மணி நேரம் காத்திருக்கின்றனர் என்றும், தமது பேருந்துகள் சேவையில் ஈடுபடும் நேரத்தில் தம்மை வரிசைகளில் காத்திருக்க வைத்துவிட்டு இ. போ. ச. பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன எனவும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தால் பொதுமக்கள் தமது பயணங்களை மேற்கொள்ள முடியாத நிலையில் பல மணி நேரம் காத்திருந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது. (ஐ)

## மூதூரில் பேருந்து விபத்து; பயணி ஒருவர் படுகாயம்!



திருகோணமலை, ஜூலை 18

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து பாதையை விட்டு விலகி விபத்துக்கு உள்ளானதில் ஒருவர் காயமடைந்தார்.

திருகோணமலை - மூதூர் - மல்லிகைதீவு பகுதியிலேயே இந்த விபத்து நேற்று காலை இடம்பெற்றது.

நீலாப்பொலை பகுதியிலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணிகளை ஏற்றிச் சென்ற மூதூர் இ.போ.ச. சாலைக்குச் சொந்தமான பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

இதில், படுகாயமடைந்த பயணி மூதூர் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## சூட்டுக் காயங்களுடன் யானையின் சடலம் மீட்பு!



மட்டக்களப்பு, ஜூலை 18

துப்பாக்கி சூட்டுக் காயங்களுடன் யானை ஒன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு - ஆயித்தியமலை உன்னிச்சை பல்லாவிக் குளத்துக்கு அண்மையாக உள்ள காட்டுப் பகுதிலேயே யானையின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த யானைக்கு சுமார் 20 வயது இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. மட்டு. வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு பொது மக்கள் வழங்கிய தகவலை யடுத்து அதிகாரிகள் சடலத்தை மீட்டனர்.

யானையின் சடலத்தில் நாள்பட்ட சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. எனினும், யானை இறந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளை ஆயித்தியமலை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஐ)

## மாமாங்கம் ஆலயத்தில் நேற்று சிரமதான பணி!

மட்டக்களப்பு, ஜூலை 18

மட்டக்களப்பு கூழாவடி விபுலானந்தா அறநெறி பாடசாலை சிறார்களால் சிரமதான பணிகள் அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலய வளாகத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்டது.



கிழக்கு இலங்கையில் பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலய வருடாந்த ஆடி அமாவாசை மகோற்சவ பெருவிழா நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில், பெருவிழாவை முன்னிட்டு மட்டக்களப்பு கூழாவடி விபுலானந்தா அறநெறி பாடசாலை ஆசிரியர்களுடன் பாடசாலை சிறார்கள் இணைந்து ஆலய வளாகத்தை துப்பரவு செய்யும் சிரமதான பணிகள் நேற்று இடம்பெற்றன.

பாடசாலை பொறுப்பாசிரியர் கலாவதி மயூரன், விபுலானந்தா அறநெறி பாடசாலை பிரதி தலைவர்.எ .ஆறுமுகம் ஆகியோரின் தலைமையில் பாடசாலை ஆசிரியர்களுடன் பாடசாலை சிறார்கள் இணைந்து இந்த சிரமதான பணியை முன்னெடுத்தனர். (ஐ)

## எரிபொருள் விநியோகத்தால் வாழைச்சேனையில் குழப்பம்!

வாழைச்சேனை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பொதுமக்கள் தமக்கு எரிபொருளை வழங்கக் கோரி குழப்பத்தில் ஈடுபட்டனதால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.



நேற்று முன்தினம், சுகாதார பிரிவினருக்கு எரிபொருள் விநியோகிக்கும் போது காத்திருந்த பொதுமக்கள் தமக்கும் வழங்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது சுகாதார பிரிவினருக்கு வழங்கிய பின்னரே மீதமுள்ளதை வழங்குவதாக எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து காத்திருந்த பொதுமக்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட்டது. எனினும், தமக்கு வழங்கும் எரிபொருளின் அளவு போதாது என்று தெரிவித்து வீதியை மறித்து மக்கள் குழப்பத்தில் ஈடுபட்டனர்.

இதனால், சுகாதாரப் பிரிவினர் சிலரும் எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டது. அவர்களுக்கு பிறிதொரு தினத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர் அறிவித்தல் விடுத்திருந்தார்.

எவ்வாறாயினும் மக்கள் போராட்டம் காரணமாக போக்குவரத்தில் சிறிது நேரம் பாதிப்பு ஏற்பட்டதுடன் பொலிஸாரும் இராணுவத்தினரும் நிலைமையை கட்டுக்குள் கொண்டுவந்தனர். (ஐ)

## காரைதீவு கடற்றொழிலாளர்களின் வாழ்வை முன்னேற்ற நடவடிக்கை!

அக்கரைப்பற்று, ஜூலை 18

காரைதீவு பிரதேசத்தை சேர்ந்த கரைவலை மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான வேலை திட்டங்கள் குறித்து கல்முனை - அம்பாறை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சமாசம் ஆராய்ந்து வருகின்றது.

நெதர்லாந்து நாட்டின் மனித நேய கூட்டுறவு சங்கத்தின் நிதி பங்களிப்பிலான ஐந்தாண்டு வேலை திட்டத்தின் கீழ் விவசாயம், வீட்டு தோட்டம், மீன்பிடி, நெசவு போன்றவை சார்ந்த சுய தொழில் முயற்சியாளர்களுக்கு சமாசம் ஆக்கமும், ஊக்கமும் வழங்குகின்றது.

காரைதீவு, நாவிதன்வெளி, கல்முனை வடக்கு, வீரமுனை, கோரக்கோயில், மல்வத்தை, மல்லிகைத்தீவு, பழைய வளத்தாப்பிட்டி, புதிய வளத்தாப்பிட்டி, அட்டப்பள்ளம், மாணிக்கமடு, திராய்க்கேணி போன்ற பிரதேசங்களில் பொருத்தமான வேலை திட் டங்கள் அடையாளம் காணப்பட்டு முன்னெடுக்கப்பட்ட வண்ணம் உள்ளன.

இதற்கு அமைய காரைதீவில் மீனவர் சிக்கன கூட்டுறவு சங்கம் ஒன்றை உருவாக்குவதற்கான பூர்வீக ஏற்பாடுகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. (ஐ)

## இரண்டு மாதங்களுக்குப் பின்னர் ஆலையடிவேம்பு மக்களுக்கு எரிவாயு

அக்கரைப்பற்று, ஜூலை 18

இரு மாதங்களுக்கு பின்னர் அம்பாறை - ஆலையடிவேம்பு தர்மசங்கரி மைதானத்தில் நேற்று முன்தினம் லிற்றோ எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்பட்டன.

வெள்ளிக்கிழமை தகவல் வெளியானது முதல் குறித்த இடத்தில் காத்திருந்த மக்கள் நேற்று முன்தினம் எரிவாயு சிலிண்டர்களை பெற்றுச் சென்றனர்.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளரின் மேற்பார்வையில் இராணுவத்தினரின் ஆதரவுடன் எரிவாயு சிலிண்டர்கள் மக்களுக்கு வழங்கப்பட்டன.இதன்போது, 12.5 கிலோ எரிவாயு 500 சிலிண்டர்களும் 5 கிலோ எரிவாயு 50 சிலிண்டர்களும் 2.5 கிலோ எரிவாயு 50 சிலிண்டர்களும் வழங்கப்பட்டன.

12.5 கிலோ எரிவாயு சிலிண்டர்கள் 5,270 ரூபாய்க்கும் 5 கிலோ எரிவாயு சிலிண்டர்கள் 2,200 ரூபாய்க்கும் வழங்கப்பட்டன. சிலிண்டர்களை பெற்றவர்களிடம் மே மாத மின்சார கட்டணப் பட்டியல் பெறப்பட்டது.

இதேநேரம் 12.5 கிலோ எரிவாயு சிலிண்டர்கள் 500 வழங்கப்பட்ட நிலையில் மேலும் பலர் சிலிண்டர்களை பெற முடியாமல் ஏமாற்றத்துடன் சென்றமையையும் அவதானிக்க முடிந்ததது. (ஐ)



## ஆயுதங்களுடன் வந்த விமானம் கிறீஸில் வீழ்ந்து நொறுங்கியது!

*எதேன்ஸ், ஜூலை 18*

சேர்பியாவில் இருந்து பங்களாதேஷுக்கு ஆயுதங்கள் மற்றும் வெடிப்பொருள்களுடன் சென்ற உக்ரைன் நாட்டு அன்ரனோவ் விமானம் ஒன்று கிறீஸ் நாட்டில் வீழ்ந்து நொறுங்கியது.


ஆயுதங்கள் உக்ரைனுக்கு ஏற்றிச் செல்லப்பட்டன என்று முற்கூட்டி வெளியான தகவல்களை சேர்பிய வெளிவிவகார அமைச்சர் நிராகரித்துள்ளார்.

விமானத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறை அடுத்து விமானி அதனை அவசரமாக கிறீஸ் நாட்டின் வட பகுதியில் உள்ள கெவாலா விமான தளத்தை நோக்கித் திருப்பியுள்ளார். எனினும், அவசர தரையிறக்கத்துக்கு முன்பாகவே விமானம் பெரும் வெடியோசையுடன் நொறுங்கி வீழ்ந்தது.

உக்ரைன் கம்பனி ஒன்றில் பதிவு செய்யப்பட்ட அந்த அன்ரனோவ் - 12 சரக்கு விமானத்தில் இருந்த எட்டுப்பேரும் உயிரிழந்தனர். அவர்கள் அனைவரும் உக்ரைன் நாட்டவர்கள் என்று கூறப்படுகிறது.

விமானத்தில் ஆபத்தான 11 மெற்றிக் தொன் பொருள்கள் ஏற்றிச் செல்லப்பட்டதால் வெடி விபத்து மற்றும் நச்சுப் புகை அபாயத்தைக் கவனத்தில் கொண்டு அது எரிந்து வீழ்ந்த இடத்துக்கு மீட்பு பணியாளர்கள் உடனடியாகச் செல்வதைக் கிறீஸ் நாட்டு அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. ட்ரோன் ஒன்றின் உதவியோடு விமானச் சிதைவுகள் பரிசோதனை செய்யப்பட்டன.

சேர்பியா ஒருபோதும் ரஷ்யாவுக்கோ உக்ரைனுக்கோ ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதில்லை. பங்களாதேஷ் நாட்டுடனான உடன்பாடு ஒன்றின் அடிப்படையிலேயே விமானத்தில் ஆயுதங்கள் அங்கு ஏற்றிச் செல்லப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



## மேற்கு ஆசியாமீதான ஈடுபாட்டை ஒருபோதும் அமெரிக்கா இழக்காது!

### சவூதியில் அமெரிக்க ஜனாதிபதி

*ஜெட்டா, ஜூலை 18*

மேற்கு ஆசியாவில் அமெரிக்காவின் ஈடுபாடு தொடரும். இங்கிருந்து வெளியேறுவதன் மூலம் இந்தப் பிரதேசத்தில் ரஷ்யா, சீனா, ஈரான் ஆகிய நாடுகளின் செல்வாக்கு அதிகரிப்பதை அனுமதிக்கப்போவதில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் சனிக்கிழமை கூறினார்.

மேற்கு ஆசிய நாடுகளுக்கு 4 நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஜோ பைடன், சவூதி அரேபியாவின் ஜெட்டா நகரில் பேசினார்.

இதன்போது, மேற்கு ஆசிய நாடுகளில் அமெரிக்காவின் ஈடுபாடு தொடரும். அந்தப் பிராந்திய நாடுகளுடனான நெருக்கமான கூட்டுறவை அமெரிக்கா கைவிட்டுச் செல்லாது. அவ்வாறு சென்றால் ஏற்படக்கூடிய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ரஷ்யா, சீனா, ஈரான் ஆகிய நாடுகள் தயாராக இருக்கின்றன. அதனை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

இந்தப் பிராந்தியத்தில் எப்போதும் செயல்படக்கூடிய, கொள்கை சார்ந்த செல்வாக்கைத் தொடர்ந்து பெற அமெரிக்கா விரும்புகிறது. இந்தப் பிராந்தியத்தில் அமெரிக்கப் படைகள் போரில் ஈடுபடுத்தப்பட்டிருந்த காலம் முடிவுக்கு வந்துவிட்டது என்பதை பெருமிதத்துடன் என்னால் தற்போது கூற முடியும். இனிவரும் காலத்தில், பொதுமக்களின் முழுமையான ஆற்றலையும் வெளிக்கொண்டு வந்து பயன்படுத்தும் நாடுகள்தான் வெற்றி பெற முடியும்.

ஆட்சியாளர்களுக்கு எதிரான கருத்துகளைக்கூட துணிச்சலாகவும் எதிர்விளைவுகளை சந்திக்காமலும் முன்வைக்கக்கூடிய சக்தி பொதுமக்களுக்கு வழங்கப்படவேண்டும் - என்றார். (ஐ)

# மத்திய தரைகடல் நாடுகளில் தீ; பல நாடுகளில் வெப்ப தாக்கம்!

- போர்த்துக்கல்லில் 238 பேர் மரணம்
- பிரான்ஸில் 14,000 பேர் வெளியேற்றம்

*லிஸ்பன், ஜூலை 18*

ஐரோப்பாவில் பரவி வரும் காட்டுத் தீயால் அங்கு பல நாடுகள் வெப்ப அலை தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளன. ஸ்பெயின், பிரான்ஸ், போர்த்துக்கல் நாடுகளில் பரவிய காட்டுத் தீ தற்போது குரோஷியா, கிறீஸ் ஆகிய நாடுகளிலும் பரவி வருகின்றது.

பிரான்ஸ் நாட்டில் காட்டுத் தீ அச்சுறுத்தலால் 14 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயினின் தெற்கு பகுதியில் 3,200இற்கும் மேற்பட்டவர்கள் தீயிலிருந்து தப்பி ஓடி வந்துள்ளனர். இவர்கள் மிஜாஸ் மலைப் பகுதிகளில் வசித்தவர்கள் என்று கூறப்படுகின்றது.

போர்த்துக்கல் நாட்டில் பரவிய தீ நேற்று கட்டுப்படுத்தப்பட்டது. ஆனால், ஒரு வாரமாக பரவிய தீயால் பாதிக்கப்பட்டு 238 பேர் உயிரிழந்தனர் என்று அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.



மத்தியதரக் கடல் நாடுகளில் மேற்கே மொராக்கோ முதல் கிழக்கே கிரீஸ் வரை ஆயிரக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் பல தண்ணீர் குண்டு விமானங்கள் தீயை அணைப்பதற்காக நிறுத்தப்பட்டுள்ளனர்.

இந்தக் காட்டுத் தீயால் ஐரோப்பாவில் வெப்பம் அதிகரித்துள்ளது. பிரான்ஸில் நேற்று ஞாயிற்றுக் கிழமை 41 பாகை செல்சியஸ் வெப்பம் நீடித்தது. இதேசமயம் போர்த்துக்கல்லில் 47 பாகை செல்சியஸாகக் காணப்பட்டது.

இந்தக் காட்டுத் தீயால் பிரான்ஸில் 10 ஆயிரத்து 500 ஹெக்ரெயர் காட்டு நிலப்பரப்பு அழிவடைந்துள்ளது என்றும் அறிய வருகின்றது.

இதேவேளை, மத்திய தரைக் கடல் நாடுகளில் பரவும் காட்டுத் தீ மேலும் பரவும் அபாயம் நீடிக்கிறது. இதனால், பல நாடுகளில் வெப்ப அலை உயர்வாகக் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ரஷ்யாவுடன் அமெரிக்கா இணைந்தே செயல்படும்!

*வாஷிங்டன், ஜூலை 18*

சர்வதேச விண்வெளி நிலைத்தில் ஆய்வுகள் மேற்கொள்வதற்காக ரஷ்யாவுடன் தொடர்ந்து இணைந்து செயல்படப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

தங்கள் கடுமையான எச்சரிக்கைகளையும் மீறி உக்ரைன்மீது போர் தொடுத்துள்ள ரஷியாவை தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொண்டு வரும் நிலையில் இந்த அறிவிப்பு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாஸா வெளியிட்ட அறிக்கையில்,

“சர்வதேச விண்வெளி நிலையத்தில் ரஷ்ய விண்வெளி ஆய்வு மையத்துடனான நாஸாவின் கூட்டுறவு தொடரும். விண்வெளி நிலையத்தில் ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்து பாதுகாப்பான முறையில் மேற்கொள்வதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மேலும், விண்வெளி வீரர்களின் உயிருக்கு பாதிப்பு இல்லாமல் ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக ரஷ்யாவுடன் இணைந்து செயல்படவிருக்கிறோம்.

விண்வெளி ஆய்வுத் துறையில் அமெரிக்கா தொடர்ந்து செயலாற்றுவதை உறுதி செய்வதற்காகவும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, ரஷ்ய விண்வெளி வீரர்களுடன் இணைந்து நாஸா விண்வெளி வீரர்கள் தொடர்ந்து ஆய்வுப் பணிகளை மேற்கொள்வார்கள். ரஷ்யாவின் சோயுஸ் விண்கலம் மற்றும் ஏவூர்தியைப் பயன்படுத்தி சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு வீரர்களை அனுப்பும் நடவடிக்கைகளை நாஸா மீண்டும் தொடங்கவுள்ளது.

இதன் ஒரு பகுதியாக, இரண்டு ரஷ்ய விண்வெளி வீரர்களுடன் நாஸா விண்வெளி வீரரான பிராங்க் ரூபியோ சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு செல்லவிருக்கிறார்.


ரஷ்யாவின் சோயுஸ் ஏவூர்தி மூலம் அவர்கள் கஜகஸ்தானிலுள்ள ஏவுதளத்திலிருந்து வரும் செப்ரெம்பர் 21-ஆம் திகதி புறப்படுவார்கள். இது தவிர, அமெரிக்காவின் ஸ்பேஸ்எஸ்க் நிறுவனம் உருவாக்கியுள்ள ஏவூர்தி மூலம் புளோரிடாவிலிருந்து 2 நாஸா வீரர்கள் வரும் செப்ரெம்பர் மாதம் விண்வெளிக்கு செல்லவுள்ளனர். அவர்களுடன் 2 ரஷ்ய விண்வெளி வீரர்களும் ஜப்பான் விண்வெளி வீரர் ஒருவரும் செல்கின்றனார்.

ஸ்பேஸ்எக்ஸ் ராக்கெட் மூலம் ரஷிய வீரர்கள் விண்வெளிக்குச் செல்வது இதுவே முதல்முறையாகும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சீனாவுக்கு ஏற்றால் போன்று இஸ்லாம் மதம் மாறவேண்டும்!

### ஜனாதிபதி ஜி ஜின்பிங்

*பீஜிங், ஜூலை 18*



சீனாவில் இஸ்லாம் மதம் சீனாவை முன்னிலைப்படுத்துவதாக இருக்க வேண்டும். அது பொதுவுடைமை சமுதாயத்துக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்.

சீனாவின் சர்ச்சைக்குரிய பகுதியான ஜின்ஜியாங் பகுதிக்கு 2014 ஆம் ஆண்டின் பின்னர் அவர் சென்றுள்ளார். ஜின்ஜியாங்கில் ஏராளமான உய்குர் இனம் உட்பட பல சிறுபான்மையின முஸ்லிம் மக்கள், சிறைகளிலும் முகாம்களிலும் அடைக்கப்பட்டுள்ளனர் என்று குற்றச்சாட்டு எழுந்தது.

இந்நிலையில், அங்கு வைத்து கருத்து தெரிவித்த சீன ஜனாதிபதி,

“மக்களின் மதம் சம்பந்தப்பட்ட தேவைகளை சீன அரசுடனும் ஆளும் கட்சியுடனும் ஒன்றிணைக்க மேம்பட்ட முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். சீனாவில் உள்ள அனைத்து இன மக்களும், “சீன தேசம், சீன கலாசாரம், சீன கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சீன குணாதிசயங்கள் கொண்ட பொதுவுடைமை கொள்கை“ ஆகியவற்றுடன் தங்கள் அடையாளத்தை வலுப்படுத்தும் வகையில், அனைத்து இன மக்களுக்கும் கல்வி கற்பதற்கும் வழிகாட்டுவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சீனாவில் இஸ்லாம் மதம் சீனாவை முன்னிறுத்துவதாக இருக்க வேண்டும். நாட்டிலுள்ள மதங்கள், சீனாவின் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியால் பின்பற்றப்படும் பொதுவுடைமை சமுதாயத்துக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகளுடன் அதைக் கொண்டு வரவேண்டும்.

சீன தேசத்துக்கான வலுவான சமூக உணர்வையும் பல்வேறு இனக் குழுக்களிடையே ஒருங்கிணைப்பு வேண்டும். மத விவகாரங்களின் நிர்வாகத் திறனை மேம்படுத்தி, மதங்களின் ஆரோக்கியமான வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் - என்றார். (ஐ)

பாகிஸ்தானுடனான டெஸ்ட்:

# பிரபாத் ஜெயசூரிய அபாரம் இலங்கை அணி முன்னிலை!



காலி, ஜுலை 18

பிரபாத் ஜெயசூரியாவின் அபார பந்துவீச்சால் பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி முன்னிலை பெற்றுள்ளது.

இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் அணியுடனான முதல் டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் காலியில் தொடங்கியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 222 ஓட்டங்களை முதல் இனிங்ஸில் பெற்றது. பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது பாகிஸ்தான் அணி.

அந்த அணிக்கு பிரபாத் ஜெயசூரியா அச்சுறுத்தலாக அமைந்தார். அந்த அணியின் தலைவர் பாபர் அஸாம் மட்டும் போராட்டத்தை வெளிப்படுத்தினார். ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்குள் வீழ்ந்தனர்.

போராடிய பாபர் அஸாம் சதம் அடித்தார். இது அவரின் 7ஆவது டெஸ்ட் சதமாக அமைந்தது. அவரும் 119 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். சகல விக்கெட்களையும் இழந்த பாகிஸ்தான் அணி 218 ஓட்டங்களை எடுத்து 4 ஓட்டங்களால் பின்தங்கியது.

இலங்கை அணியின் பந்துவீச்சில் பிரபாத் ஜெயசூரிய 5 விக்கெட்களை கைப்பற்றினார். தொடர்ச்சியாக 3 இனிங்ஸ்களில் அவர் 5 அல்லது 5இற்கு மேற்பட்ட விக்கெட்களை கைப்பற்றினார். ரமேஷ் மெண்டிஸ், மஹீஷ் தீக்‌ஷன ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஒஸத பெர்னாண்டோ, டிமுத் கருணாரத்ன தொடக்கம் கொடுத்தனர். திமுத் கருணாரத்ன 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

நேற்றைய தினம் ஆட்டம் நிறைவடைந்தபோது இலங்கை அணி ஒரு விக்கெட்டை இழந்து 36 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஒஸத பெர்னாண்டோ 17, கசூன் ராஜித 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இன்று போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டமாகும்.

# தொடரை வென்றது இந்தியா; ரிஷப் பந்த் அதிரடி சதம்!




ஓல்ட் டிரபோர்ட், ஜுலை 18

இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் ரிஷப் பந்தின் அதிரடி சதத்தால் இந்திய அணி 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நேற்று ஓல்ட் டிரபோர்ட் மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 45.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 259 ஓட்டங்களைக் குவித்தது.

அந்த அணியில் றோய் 41 ஓட்டங்களையும் ஜோஸ் பட்லர் 60 ஓட்டங்களையும் குவித்தனர். இந்திய பந்துவீச்சாளர்கள் தரப்பில் அதிகபட்சமாக ஹார்திக் பாண்ட்யா 4 விக்கெட்களையும் சஹால் 3 விக்கெட்களையும் எடுத்தனர்.

260 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி எனக் களமிறங்கிய இந்திய அணியில் தொட்டக்க ஆட்டக்காரர்களான ரோஹித் சர்மா மற்றும் ஷிகர் தவான் சொற்ப ஓட்டங்களிலேயே ஆட்டமிழந்தனர். இந்தப் போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவார் என எதிர்பார்க்கப்பட்ட விராட் கோலியும் 17 ஓட்டங்களில் ஆட்டமிழந்து அதிர்ச்சி அளித்தார்.

இருப்பினும் ரிஷப் பந்த், ஹார்திக் பாண்ட்யா இணை இங்கிலாந்து பந்துவீச்சாளர்களை திணறடித்தது. ஹார்திக் பாண்ட்யா 71 ஓட்டங்களில் ஆட்டமிழந்தாலும் 42.1 ஓவர்களில் 261 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி பெற்றது. இறுதிவரை ஆட்டமிழக்காமல் அதிரடியாக ஆடிய ரிஷப் பந்த் 125 ஓட்டங்களைக் குவித்தார்.

இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை இந்திய அணி 2 - 1 என்கிற கணக்கில் வென்றது. (ஐ)



# பங்களாதேஷ் அணியின் தமீம் இக்பால் ஓய்வு

டாக்கா, ஜுலை 18

பங்களாதேஷ் அணியின் தலைவர் தமீம் இக்பால் சர்வதேச இருபது - 20 போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

தமீம் இக்பால் 2007 முதல் பங்களாதேஷ் அணிக்காக விளையாடி வந்தார். அந்நாட்டின் சார்பாக இருபது - 20 போட்டியில் சதமடித்த ஒரே வீரர் என்ற பெருமை இதுவரை அவரிடமே இருக்கிறது. 3ஆவது அதிகபட்ச ஓட்டங்களை எடுத்த பங்களாதேஷ் அணி வீரராகவும் அவரே இருக்கிறார்.

மேற்கு இந்தியத் தீவுகள் அணிகளுக்கு எதிரான 3 இருபது -20 போட்டிகள் கொண்ட தொடரில் 3-0 என்ற கணக்கில் பங்களாதேஷ் அணி அபார வெற்றி பெற்றது.

இந்த தொடரின் தொடர் நாயகன் விருது பங்களாதேஷ் அணியின் தலைவர் தமீம் இக்பாலுக்கு வழங்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமீம் இக்பால் தனது முகநூல் பக்கத்தில், "இன்று முதல் சர்வதேச இருபது - 20 போட்டிகளிலிருந்து நான் ஓய்வு பெறுகிறேன். அனைவருக்கும் நன்றி"

ஜனவரியில் தமிம் இக்பால் கூறியதாவது:

இருபது - 20 கிரிக்கெட்டில் என்னுடைய எதிர்காலம் பற்றி விவாதித்தோம். இந்த வருட இருபது - 20 உலகக் கிண்ணம் வரை நான் விளையாட வேண்டும் என வங்கதேச கிரிக்கெட் சபை அதிகாரிகள் என்னை வலியுறுத்தினார்கள். ஆனால், எனக்கு வேறு எண்ணம் உள்ளது. அடுத்த ஆறு மாதங்களுக்கு இருபது - 20 கிரிக்கெட்டில் விளையாடப் போவதில்லை. டெஸ்ட், ஒருநாள் கிரிக்கெட்டில் மட்டுமே என் கவனம் இருக்கும். இருபது - 20 கிரிக்கெட்டில் பங்களாதேஷ் அணிக்கு என் தேவையிருக்காது என எண்ணுகிறேன். ஆனால் கடவுள் நினைத்தால், கிரிக்கெட் சபைக்கு நான் தேவைப்பட்டால் விளையாட நான் தயார். அப்போது இருபது - 20 கிரிக்கெட்டில் மீண்டும் விளையாடுவது பற்றி யோசிப்பேன் - என்றார். (ஐ)

# எல். பி. எல். தொடர் ஒத்திவைக்கப்பட்டது!

கொழும்பு, ஜுலை 18

2022 ஆம் ஆண்டுக்கான லங்கா பிறீமியர் லீக் (எல். பி. எல்) கிரிக்கெட் தொடர் பிற்போடப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் 21 வரை நடைபெறவிருந்த லங்கா பிறீமியர் லீக் தொடரானது உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஒத்திவைக்கப்படுவதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

நாட்டின் தற்போதைய 'பொருளாதார சூழ்நிலையை' மேற்கோள் காட்டி, போட்டியை நடத்துவதற்கு ஏற்றதாக இல்லை என அணிகளின் உரிமையாளர்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

LPL T20

# இந்தியா தஞ்சமளிக்க மறுத்த பின்னரே கோட்டாபய மாலைதீவுக்கு தப்பினாராம்!

கொழும்பு, ஜூலை 18

**முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்தியாவுக்கு தப்பியோட முயன்றார். ஆனால், அவருக்கு அனுமதி கிடைக்காததாலேயே அவர் மாலைதீவுக்கு தப்பிச் சென்றார்.**

கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கடற்படைக்கு சொந்தமான கப்பல் மூலமாக கோட்டாபய தப்பிச் சென்றாரென தகவல்கள் பரவின.

அவர் தப்பிச் சென்றது உண்மை தான் என்றாலும், அவர் எங்கு பதுங்கி இருந்தார் என்பது குறித்து எந்தத் தகவலும் வெளிவரவில்லை. சாரகொட இராணுவத் தலைமையகத்தில் அவர் பாதுகாப்பாக இருந்தாரெனத் தெரிவிக்கப்பட்டது. எங்கு இருந்தாலும் அவர், போராட்டக்காரர்களின் கண்ணில்படாமல் பாதுகாப்பாக



நாட்டை விட்டு வெளியேறுவதே அவரின் நோக்கமாக இருந்தது. அதற்கான திட்டங்களை அவரே வகுத்தார். அவரின் உண்மையான நோக்கம் இந்தியா செல்வதுதான்.

அதற்கு தொடர்புபட்ட துறைகள் மற்றும் தனிநபர்களுடன் ஆலோசனை நடத்தி, இந்தியா செல்ல திட்டமிட்டார். ஆனால், இந்தியாவிடம் இருந்து கடைசியில் ஒப்புதல் எதுவும் கிடைக்கவில்லை. முதல் முயற்சி தோல்வியில் முடிவடைந்தையடுத்து, மாலைதீவுக்கு தப்பிச் செல்ல அவர் முடிவு செய்தார். (சி)

## அனுமதியின்றி மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது

கொழும்பு, ஜூலை 18

நுவரெலியா, பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்கு பெட்ரசோ தோட்டத்தில் அனுமதிப்பத்திரமின்றி மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவரை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

பொகவந்தலாவை பிரதேசத்தை சேர்ந்த 20, 53 வயது நபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின்போதே குறித்த இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது மாணிக்கக்கல் அகழ்வுக்காகப் பயன்படுத்திய பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

## ரணில் விக்கிமரசிங்கவுக்கு மக்கள் நல்ல பாடம் புகட்டுவர்!

### மக்கள் விடுதலை முன்னணி

கொழும்பு, ஜூலை 18

ரணில் விக்கிமரசிங்கவுக்கு இம்முறை மக்கள் நல்ல பாடம் புகட்டுவர் என்று, மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

ரணில் விக்கிரமசிங்க இம்முறையே மக்களிடமிருந்து நல்ல ஒரு பாடத்தை கற்றுக் கொள்ளப் போகின்றார். போராட்டத்தை முடக்குவதற்காக பல்வேறு தரப்பினர் போராட்டக்களத்தில் ஊடுருவியுள்ளனர்.

போராட்டக்களத்தில் ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் கதைக்கும்போது இந்தத் தரப்பினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காக இன்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவானது, யானையின் பின்னால் ஒளிந்திருக்கிறது. மகிந்த ராஜபக்ஷவை ரணில் பாதுகாப்பதும் அதேபோன்று ரணிலை மகிந்த ராஜபக்ஷ பாதுகாப்பதுமான செயல்பாடுகளே தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

மக்களைக் கொல்வதற்கும் உடைமைகளை அழிப்பதற்கும் எமது கட்சி எதிரானது. இவ்வாறான செயல்பாடுகளை ஜே.வி.பி ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது - என்றும் கூறினார். (கே)

## கடலில் மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் மூவர் மாயம்!







மன்னார், ஜூலை 18

தலைமன்னார் பியர் பகுதியிலிருந்து ஒரு படகில் மீன்பிடிக்கச் சென்ற மூவரை காணவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களை தேடும்பணி இடம் பெற்று வருகின்றன போதும் இவர்கள் பற்றிய தகவல் நேற்று வரை கிடைக்கவில்லை.

இராசதுரை இராசசேகர் (வயது 52) ராஜமூர்த்தி மோகன் ராஜ் (வயது 50) ராஜி ஜனாத் (வயது 27) ஆகிய மூன்று மீனவர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

இவர்கள் வழமைபோன்று தலைமன்னார் பியர் துறையிலிருந்து வட கடலில் வலிச்சல் வலை மீன் பிடிக்காக கடந்த வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் ஒரு வெளிக்கள இயந்திரப் படகில் (படகு இல. ஓஎவ்ஆர்பி-ஏ-4138 எம். என். ரி) புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

இவர்கள் அன்றையதினம் வழமைபோன்று கரை திரும்பவில்லை. இதையடுத்து, அந்தப் பகுதி மீனவர்களும் கடற்படையினரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் தேடலில் ஈடுபட்டனர்.

ஆனால், நேற்று வரை அவர்கள் பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை. இந்நிலையில் கடந்த ஓரிரு தினங்களாக இவ் பகுதியில் பலத்த காற்று வீசியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## யானை தாக்கி ஒருவர் மரணம்!

கொழும்பு, ஜூலை 18

காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி நபரொருவர் நேற்று முன்தினம் மரணமானார்.

புத்தளம் -நிலபெம்ம - சாலியவலை பிரதேசத்தை சேர்ந்த 76 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்த நபர் தனது வீட்டுக்கு அருகிலேயே காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்கானார் என்றும் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (கே)

புதிய ஜனாதிபதி தெரிவு:

## ஐக்கிய மக்கள் சக்தியின் முடிவுக்கே மு. கா. ஆதரவு!

கொழும்பு, ஜூலை 18

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி எடுக்கும் எந்தவொரு தீர்மானத்துக்கும் இணக்கம் தெரிவிக்கப்படும் என்று சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு மத்தியில், பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதன் மூலமே தீர்வை பெற்றுக் கொடுக்க முடியும்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன தற்போது சில மோசடி குழுக்களாக பிளவுபட்டுள்ளன. ஒரு தரப்பினருக்கு ஆதரவு வழங்குவதற்காக கட்சிக்குள் இணக்கப்பாடு இல்லை என்றும் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். (ஐ)

## வீட்டுக்குள் புகுந்து பெற்றோல் திருட்டு!

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ். மாவட்ட செயலகத்துக்கு அருகில் உள்ள வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் இருந்து பெற்றோலை இருவர் திருடி சென்றுள்ளனர் என்று அறிய வருகின்றத.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் நுழைந்த இருவர் , வீட்டினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் இருந்து பெற்றோலை திருடிச் சென்றுள்ளனர்.



காலையில், மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் அதை இயக்க முற்பட்ட போது பெற்றோல் இல்லாதது தெரிந்தது. இதையடுத்து, அவர் வீட்டில் பொருத்தியிருந்த பாதுகாப்பு கண்காணிப்பு கமராவை சோதித்த போது, வீட்டுக்குள் நுழைந்த இருவர் பெற்றோலை திருடிச் செல்வது அவதானிக்கப்பட்டது.

அந்த நபர் இந்தக் காணொலியை தனது சமூக வலைத்தளப் பக்கங்களில் பகிர்ந்துள்ளார். (ஐ)

## தம்பியின் தாக்குதலில் அக்கா உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை 18

71 வயது தம்பியின் தாக்குதலில் 76 வயதான அவரின் அக்கா உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் குருநாகல் - குளியாப்பிட்டி - எலத்தலவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

எலத்தலவ, தீகல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 76 வயது பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய 71 வயது நபரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

காணி தகராறே இந்தக் கொலைக்கு காரணம் என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளையும் தொடர்ந்து வருகின்றனர். (கே)

## தமிழ் தேசியக்...

தமிழ்த் தேசியப் பரப்பில் இணைந்து இயங்கும் 6 தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை இணையவழியில் கலந்துரையாடல் ஒன்றில் பங்கேற்றபோதே மேற்படி முடிவுகள் எடுக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, ஈ. பி. ஆர். எல். எவ்வின் தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என். சிறீகாந்தா ஆகியோர் பங்கேற்றனர். இந்தக் கலந்துரையாடலில் புளொட் கட்சியின் தலைவர் சித்தார்த்தன் பங்கேற்கவில்லை. பயணம் ஒன்றில் ஈடுபட்டிருந்த அவர் கட்சி தலைவர்கள் எடுக்கும் முடிவுக்கு உடன்படுவதாகத் தெரிவித்திருந்தார் என்றும் கூறப்பட்டது.

இந்தக் கலந்துரையாடல் குறித்து, தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒருங்கிணைப்பாளர் கு. சுரேந்திரன் அனுப்பிய செய்திக் குறிப்பில்,

தற்போதைய அரசியல் சூழ்நிலை பற்றிய இறுதி நிலைப்பாடு சம்பந்தமாக உரையாடப்பட்டது. கடந்த இரு வாரங்களாக தொடர்ச்சியாக தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசியல் சூழ்நிலை, தமிழ் மக்களின் நிலைப்பாடு, இதை எப்படிக் கையாள்வது என்பன தொடர்பில் பேசப்பட்டன.

ஜனாதிபதி வேட்பாளர்கள், அமையப்போகும் அரசாங்கம், போராட்ட அமைப்புகள் ஆகியோரிடம் தமிழ் மக்கள் சார்பில் கோரிக்கை ஒன்றை முன்வைப்பதாக தீர்மானிக்கப்பட்டது. இந்தக் கோரிக்கைள் சம்பந்தமாக தயாரிக்கப்பட்ட வரைவும் பரிசீலிக்கப்பட்டது.

இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு மீண்டும் கூடி இந்த வரைவை இறுதி செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது. இதற்கு சர்வதேச ஆதரவை ஒருங்கமைக்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் தமது எதிர்கால அரசியல் இருப்பை தீர்மானிக்க மீண்டும் கிடைத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தை தமிழர் தரப்பு ஒருமித்த நிலையில் கையாள்வதானது எமது மக்களுக்கான உறுதியான முக்கிய மாற்றங்களை ஏற்படுத்த வழி அமைக்கும். இந்த நிலையில் எமது மக்கள் நலன் கருதி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிடமும் இந்த முயற்சியில் இணைந்து கொள்வதற்கான கோரிக்கை முன்வைக்க தீர்மானிக்கப்பட்டது - என்றுள்ளது. (ஐ)

## இலங்கை...

ஞாயிற்றுக்கிழமை இந்தக் கூட்டத்துக்கான அழைப்பை விடுத்துள்ளார்.

இந்தியாவின் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சர்வகட்சிகளின் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கும் இந்தக் கூட்டத்தில், இந்தியா இலங்கைக்கு வழங்கிய உதவிகள் குறித்து விளக்கமளிக்கப்படவுள்ளது.

மேலும், இலங்கை நெருக்கடியால் இந்தியாவுக்கு - குறிப்பாக தமிழ்நாட்டுக்கு தஞ்சம் கோரி வரும் அகதிகள் குறித்து கவலைகள் எழுந்துள்ளன. பொருளாதார தஞ்சம் கோருவோரை அகதிகளாக அங்கீகரிப்பதில் இருக்கும் சிக்கல் குறித்தும் ஆராயப்படும். அத்துடன், முகாம்களிலுள்ள அகதிகள் விடயத்துக்கும் சர்வகட்சி கூட்டம் மூலம் தீர்வு எட்டப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கர் ஆகியோரை அண்மையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் நேரில் சந்தித்துப் பேசினார். இதன்போது இலங்கை நிலைமை குறித்து கவலை வெளியிட்ட அவர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை நேரடியாக அனுப்ப அனுமதி பெற்றிருந்தார்.

இலங்கையில் எழுந்துள்ள பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து போராட்டங்கள் வெடித்தன. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியையும் இராஜினாமா செய்துள்ளார். இந்நிலையில், பணவீக்கம், பொருளாதார வீழ்ச்சி, எரிபொருள் - எரிவாயு தட்டுப்பாடு, விவசாயம் சார் பிரச்னைகளில் மோசமாக இலங்கை சிக்கிக்கொண்டுள்ளது.

இதேநேரம், இலங்கையின் பொருளாதார நெருக்கடி இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும், சிக்கலாகவும் மாறியுள்ளது. இந்நிலையிலேயே சர்வகட்சி மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நெருக்கடியை சமாளிப்பதற்கு 380 கோடி அமெரிக்க டொலர்களுக்கு மேல் இந்திய அரசு இலங்கைக்கு ஆதரவு அளித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## திட்டமிட்ட...

ரின் கட்சியினரும் படுதோல்வி அடைந்தனர். ஓர்ஆசனம்கூட கிடைக்காமல் அவரும் வீட்டுக்கு சென்று விட்டார்.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட தேசியப் பட்டியல் ஆசனத்தால் அவர் பாராளுமன்ற உறுப்பினராகும் வாய்ப்பு கிடைத்தது. தனி ஒரு மனிதனாக ரணில் விக்கிரமசிங்க அந்த தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தவாறு தற்போது அரசியலில் விளையாடுகின்றார்.

மே 9 அன்று "கோட்டா கோ கம" கிராமத்தின் மீதான தாக்குதலின் எதிர்வினையாக, பல அமைச்சர்கள் மற்றும் அமைச்சர்களின் வீடுகள் எரிக்கப்பட்டன. அதன் விளைவாக பொதுஜன பெரமுன அரசின் ஒரே மீட்பராக ரணில் விக்கிரமசிங்க பிரதமரானார்.

ரணிலுக்கு பிரதமர் பதவி கொடுக்க எங்களுக்கு பைத்தியமா என்று கூச்சலிட்ட அமைச்சர்கள் பின்னர் அரசியலில் நிரந்தர எதிரிகள் இல்லை என்று அறிவித்தனர். அரசுடன் ரணில் இணைந்தது பிரதமராக இருப்பதற்கு அல்ல. ஜனாதிபதியாக வருவதற்காகவே.

அவர் பிரதமர் பதவியை ஏற்றவுடனேயே 'கோட்டா கோ கம' கிராமத்துக்கு வசதிகள் செய்து தர ஒரு குழுவையும் நியமித்தார். கட்சி சார்பற்ற செயல்பாட்டாளர்கள், கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி பதவியில் இருந்து அகற்றும் வல்லமை படைத்தவர்கள் என்பதை அவர் எப்போதும் அறிந்திருந்தார்.

அமைச்சர்களின் வீடுகளை எரித்ததன் பின்விளைவாக அரசாங்கத்துடன் இணைந்துகொண்ட ரணில் விக்கிரமசிங்க, இப்போது தனது பூர்வீக வீட்டை எரித்ததன் பிரதிபலனாக ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்துள்ளார்.

ரணிலின் பாதை வரைபடத்தின்படி எதிர்வரும் 20 ஆம் திகதி பாராளுமன்றின் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொள்வார்.

வீதிப் போராளிகள் எடுக்கும் தீர்மானங்களின் அடிப்படையில் எதிர்காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் பாதை வரைபடம் தீர்மானிக்கப்படும். கடந்த 9ஆம் திகதி கொழும்பில் இரண்டாவது தடவையாக வீசிய பொதுமக்களின் சுனாமி அலை ஜனாதிபதி மாளிகைக்கு செல்லும் வழியில் கட்டப்பட்டிருந்த தடையையும் அழித்தபோது கோட்டாபய ராஜபக்ஷ தனது பையில் சிக்கியதை மாத்திரம் எடுத்துக்கொண்டு துறைமுகத்திற்கு தப்பிச் செல்ல வேண்டியிருந்தது. கடைசி நேரத்தில் அவருக்கு உதவ கடற்படைக்கு சொந்தமான கப்பல் வந்தது.

நாடு எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்னைகளுக்கு தீர்வை வழங்கும் இடைக்கால சர்வகட்சி அரசாங்கத்தின் ஊடாக முன்கூட்டியே பொதுத் தேர்தலை நடத்துமாறு இளையோர்கள் கோருகின்றனர். அதையும் தாண்டி, ஓர் அமைப்பு மாற்றத்தை, அமைப்பில் மாற்றத்தை உருவாக்குவது எதிர்கால அரசாங்கத்தின் பொறுப்பாகும். நிறைவேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போராட்டத்தின் பாதை வரைபடத்தை பின்பற்றத் தவறினால், அவரும் இந்து சமுத்திரத்தில் குதிக்க வேண்டியிருக்கும் - என்று சிங்கள வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது. (சி)

### புதிய ஜனாதிபதி தெரிவு:

# பிரசாரம், பேச்சுகள் சூடுபிடிப்பு; பாதுகாப்பு ஏற்பாடுகளும் தீவிரம்!

கொழும்பு, ஜூலை 18

ஜனாதிபதி பதவிக்கு நான்கு முனைப் போட்டி நிலவும் சூழலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அரசியல் கட்சிகளுக்கு இடையேயான கூட்டங்கள், பேச்சுக்கள் தீவிரமாக இடம்பெற்றன என்று அறியக் கிடைக்கின்றது.

ஜனாதிபதி தெரிவுக்கான பிரசாரங்களில் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களும் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளமையை சமூக ஊடகங்கள் பிரதிபலிக்கின்றன. தாம் விரும்பிய - சார்ந்த வேட்பாளர்களை ஆதரிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்களை அவர்கள் கோரியுள்ளனர்.

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜே. வி. பி. தலைவர் அநுர குமார திஸநாயக்க, சிறீ லங்கா பொதுஜன பெரமுனவை சேர்ந்த டலஸ் அழகப்பெரும ஆகியோர் பாராளுமன்றத்தில் நாளை செவ்வாய்க்கிழமை வேட்புமனுக்களை வழங்கவுள்ளனர்.

ஜனாதிபதிக்கான தெரிவில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது. ஆனால், இந்த விடயம் அந்தக் கட்சிக்குள் முரண்பாட்டை உருவாக்கியுள்ளது. இதனால், ரணில் ஆதரவு அணி - டலஸ் ஆதரவு அணி என அந்தக் கட்சியினர் இரண்டாக பிளவுற்றுள்ளனர்.

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார போன்றோரின் 10 அரசியல் கட்சிகளும் தமது கோரிக்கைகள் தொடர்பில் வேட்பாளர்களுடன் பேசிய பின்னரே இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று அறிவித்துள்ளன.

இதேசமயம், வாக்களிக்க வரும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு அளிக்குமாறு பொது பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. வெளிமாவட்டங்களிலிருந்து கொழும்புக்கு வரும் பாராளுமன்ற உறுப்பினர்களை முற்கூட்டியே (வெள்ளிக்கிழமை) வருமாறு அறிவுறுத்தப்பட்டது.

வேட்புமனு தாக்கல் மற்றும் வாக்குப் பதிவை முன்னிட்டு பாராளுமன்றத்துக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

# வாகனங்கள் அகற்றப்பட்டாலே நிலையங்களுக்கு எரிபொருள்!

கொழும்பு, ஜூலை 18

வாகனங்கள் அகற்றப்பட்ட பின்னரே அந்த எரிபொருள் நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகம் செய்யப்படும் என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தனது ருவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளதாவது;

விநியோகம் தொடங்கும் வரை எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் (சிபெட்கோ) எரிபொருள் நிலையங்களில் வரிசையில் நிற்க வேண்டாம் என்று பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

வாகனங்கள் அகற்றப்பட்ட பின்னரே அந்த எரிபொருள் நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகம் செய்யப்படும். - என்றுள்ளது. (ஐ)

## காலிமுகத்திடல்...

ஆரம்பமான பின்னர், பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் பதவி விலகினர். இந்நிலையில் அடுத்து ஆட்சிக்கு வரும் தலைவர் நாட்டை சரியான வழியில் கொண்டு செல்ல வேண்டும் என்று போராட்ட களத்திலுள்ள மக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

கடந்த 9ஆம் திகதி ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகத்தை மக்கள் முற்றுகையிட்டமையால் கோட்டாபய ராஜபக்ஷ அங்கிருந்து தப்பியோடினார். இதைத் தொடர்ந்து அவர் ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்தார்.

இதனால், போராட்டத்தின் 100ஆவது நிறைவுநாளை காலிமுகத்திடல் போராட்டக்காரர்களும் மக்களும் கொண்டாடினர்.

இந்நிலையில், நேற்றைய தினம் 'கோ ஹோம் ரணில்' போராட்டமும் ஆரம்பிக்கப்பட்டது. (ஐ)

## எரிபொருட்களின்...

92 ஒக்ரென் பெற்றோல் லீற்றருக்கு 20 ரூபாயால் குறைந்து 450 ரூபாயாகவும், சுப்பர் பெற்றோல் எனப்படும் 95 ஒக்ரென் பெற்றோல் லீற்றர் 10 ரூபாயால் குறைந்து 540 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று, ஒட்டோ டீசல் லீற்றருக்கு 20 ரூபாய் குறைந்து 440 ரூபாயாகவும் சுப்பர் டீசல் 10 ரூபாய் குறைந்து 510 ரூபாயாகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

இதேசமயம், எரிபொருள் அனுமதி பத்திர முறையை பின்பற்றி எதிர்வரும் 21ஆம் திகதி முதல் எரிபொருள் விநியோகம் இடம்பெறும் என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. (ஐ)

## போட்டியிலிருந்து...

கால அரசியல் நிகழ்ச்சி நிரல் இல்லாத இரு பாராளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி மற்றும் பிரதமராக நியமிக்கும் முயற்சி யிலிருந்து நாம் பின்வாங்கவில்லை. இவ்வாறான இணக்கப்பாடு எட்டப் பட்டால் இறுதி நேரத்திலும் நான் போட்டியிலிருந்து விலகத் தயார்.

ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றம் ஊடாக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கு முயற்சி செய்து வருகிறார். அவரின் நகர்வுகள் தோற்கடிக்கப்பட வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

## கோட்டாபயவை...

நேற்றுமுன்தினம் சந்தித்த சிங்கப்பூர் அமைச்சர் காசி விஸ்வநாதன் சண்முகம், சிங்கப்பூர் அரசால் இனிப் பாதுகாப்பு அளிக்க முடியாது எனவும், நாட்டை விட்டு 15 நாட்களுக்குள் வெளியேறும்படி கூறினார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, சிங்கப்பூரிலிருந்து இந்தியா வருவதற்கு கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த கோரிக்கையை அந்த நாட்டு அரசாங்கம் நிராகரித்துள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டது.

இதனிடையே, முன்னாள் ஜனாதிபதி என்ற சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் இலங்கைக்கே திரும்பலாம் என்றும் அவரின் கட்சியினர் தெரிவித்துள்ளனர். (ஐ)

## தேசிய...

பல வாகனங்களை கொண்டுள்ள வர்த்தக நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் ஒரே தடவையில் முழுவாகனங்களையும் பதிவு செய்யும் நடைமுறை அடுத்த சில நாட்களில் மேம்படுத்தப்படும் என்று அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

சரிபார்க்கப்பட்ட பின்ன ஒவ்வொரு வாகனத்துக்கும் கியூ. ஆர். குறியீடு வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# மூன்றாம் உலக நாடுகள் பாதிக்கப்படுவதை தடுங்கள்

## சர்வதேச மாநாட்டில் பதில் ஜனாதிபதி கோரிக்கை



கொழும்பு, ஜூலை 18

தற்போதைய சர்வதேச சூழ்நிலையில் மூன்றாம் உலக நாடுகள் மோசமாகப் பாதிக்கப்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் அவசியம் என்று பதில் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க சர்வதேச மாநாடு ஒன்றில் தெரிவித்துள்ளார்

இலங்கையில் ஆறு மில்லியன் மக்கள் போசாக்கு இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். வேறு அறிக்கைகள் இலங்கையில் 7.5 மில்லியன் மக்கள் போசாக்கு இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கின்றன. இலங்கையின் நெல் உற்பத்தி சராசரியாக 24 மில்லி யன் மெற்றிக் தொன், எனினும் 2021 இல் உற்பத்தி 16 மில்லியன் மெற்றிக் தொன்னாக குறைந்துள்ளது.

இதன்காரணமாக இலங்கை தனது அரிசி தேவையின் மூன்றில் ஒன்றை இறக்குமதி செய்யவேண்டிய நிலையில் உள்ளது. அந்நியசெலாவணி நெருக்கடிகள் இதனை செய்ய முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளன. இலங்கை எரிபொருள் விநியோக நெருக்கடியையும் எதிர்கொண்டுள்ளது.

உலகவங்கி அங்கம் வகிக்கும் ஜி7 உணவு பாதுகாப்பு தொடர்பான சர்வதேச அமைப்பு 14 பில்லியன் டொலர்களை உணவு கொள்வனவுக்கு வழங்கியுள்ளது நாங்கள் அவர்களுக்கு நன்றியுடையவர்களாக உள்ளோம்.

இலங்கையில் நாங்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு நாங்களும் சர்வதேச நிலையும் காரணம், உக்ரைன யுத்தமும் ஐரோப்பிய ஒன்றிய தடைகளும் எங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

ஐரோப்பிய ஒன்றியம், தடைகள் எங்களைப் பாதிக்காது என தெரிவிக்கின்றது. ஆனால், எங்களைப் போன்ற மூன்றாம் உலக நாடுகளை மோசமாக பலவீனப்படுத்தும்.

ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்தை மாத்திரம் குற்றம் சாட்டமுடியாது ரஷ்யா யுத்த நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும்,ரஷ்யாவும் உக்ரைனும் யுத்த நிறுத்தத்திற்கு இணங்கவேண்டும் என்றும் தெரிவித்தார். (ஐ)

## விபத்தில் தம்பதியர் பலி!

மொனராகலை, ஜூலை 18

மொனராகலையில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஆண் ஒருவரும் அவரின் கர்ப்பவதி மனைவியும் உயிரிழந்தனர். மொனராகலை - வெல்லவாய வீதியில் புத்தல குடா ஓயா பிரதேசத்துக்கு அருகில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இந்நிலையில், குறித்த விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மொனராகலை பொலிஸார் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தாயாரை உலக்கையால் அடித்துக் கொன்ற மகள்!

கொழும்பு, ஜூலை 18

தனது மகளை அடித்ததால் தனது தாயாரை உலக்கையால் அடித்துக் கொன்ற குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - பொரளை பேஸ்லைன் வீதியிலுள்ள சிங்கபுர குடியிருப்பில் வசித்து வந்த முஹமட் ஜெஸ்மின் என்ற 65 வயதான தாயே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொலை சம்பவம் தொடர்பில் உயிரிழந்த பெண்ணின் 38 வயதான மகள் கைது செய்யப்பட்டதுடன், கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் உலக்கையும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட பெண்ணின் 6 வயது மகளை தாயார் அடித்தார் என்றும், இதனால் கோபத்தில் தாயின் தலையில் உலக்கையால் தாக்கினார் என்றும் கூறப்படுகின்றது.

கைதான பெண், அங்கொடை மனநல காப்பகத்தில் சிகிச்சைப் பெற்று சில தினங்களுக்கு முன்பே வீடு திரும்பியவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## ஜனாதிபதி தேர்தலில் எனது வாக்கு டலஸ்க்கு

### வாசுதேவ நாணயக்கார

கொழும்பு, ஜூலை 18

ஜனாதிபதி பதவிக்கான வாக்கெடுப்பில் எனது வாக்கு பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவுக்கே வழங்கப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சம்பிரதாய பிரிவினைகளால் இல்லாமல் சர்வகட்சிகளின் இணக்கத்துடன் வேலைத் திட்டமொன்றை ஏற்படுத்தவும் மக்களுக்கு விரைவாக நிவாரணங்களை வழங்குவதுடன் போதிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் டலஸ் அழகப்பெரும பலமிக்க பாராளுமன்ற பிரதிநிதி என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)







## வன்முறையால் வீடுகளை இழந்த எம். பிக்களுக்கு வீடு வழங்க உறுதி!

கொழும்பு, ஜூலை 18

மே 9 வன்முறை சம்பவங்களால் பாதிக்கப்பட்ட ஆளும் கட்சியான சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளை மீள நிர்மாணித்து தருவதாக பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதியளித்துள்ளார்.

மொட்டு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட முறையில் தொலைபேசியில் அழைப்பை எடுத்து உரையாடி வரும்

ரணில், மேற்கண்டவாறு உறுதியளித்து வருகிறார் என்று கூறப்படுகின்றது.

தனது ஆட்சியின் கீழ் வன்முறை சம்பவங்களுக்கு இடமில்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளை தாக்கியவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ரணில் உறுதியளித்து வருகிறார் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் அளிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அறிக்கை ஒன்றையும் அதிகாரிகளிடம் ரணில் கோரியுள்ளார். (ஐ)

## ரஞ்சனை விடுதலை செய்யும் நடவடிக்கை நீதி அமைச்சரிடம்!

கொழும்பு, ஜூலை 18

சிறை தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்வதற்கான சகல நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்குமாறு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர், பதில் ஜனாதிபதியிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்வதற்கு தேவையான உரிய ஆவணங்களை தயாரித்து, சட்டமா அதிபர் மற்றும் உயர் நீதிமன்ற நீதியரசர் ஆகியோரிடம் கையளிக்குமாறும் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதற்கமைய வெகுவிரைவில் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு விடுதலை கிடைக்கும் என்று தான் நம்புவதாக பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எதிர்கட்சிகள் இணைந்த அரசு - டலஸ்! ஊழலற்ற அரசை அமைப்போம் - சஜித்

## ஜனாதிபதி வேட்பாளர்கள் கருத்து

கொழும்பு, ஜூலை 16

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகலை அடுத்து உருவாகியுள்ள ஜனாதிபதி பதவிக்கான வெற்றிடத்திற்காக 4 பிரதான வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். இவ்வாறு களமிறங்கியுள்ள வேட்பாளர்கள் தமது தீர்மானம் குறித்து கருத்துக்களையும் வெளியிட்டுள்ளனர்.

எதிர்வரும் புதன்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தெரிவுக்கான தேர்தலில் களமிறங்குவதாக அறிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும மற்றும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தமது ருவிட்டர் பக்கத்தில் இவ்வாறு பதிவிட்டுள்ளனர்.

எதிர்க்கட்சிகள் இணைந்து வரலாற்றில் முதன் முறையாக ஒருமித்த அரசாங்கம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதற்காகவே ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஊழல் மற்றும் சகாக்கள் அரசியலுக்கு



ஒத்துழைப்பு வழங்குவது , இனிமேலும் பிரயோசன மற்றதாகவே அமையும் என்பதை எதிர்தரப்பினருக்கு தெளிவுபடுத்துவதற்கு முயற்சிப்பதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
07.00 மணி : இயற்கை வழி



7.05 மணி : உளவியல் கருத்து- உளவளத்துனையாளர் யாழ் பாவாணன்
7.15 மணி : கதைவழி அறமொழி வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



07.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-நவீன சரஸ்வதி சபதம் குட்டிப்புலி
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
06.30 மணி : நலந்தானா



**இரவு**
07.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கா விவாத நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
09.30 மணி: மீம்ஸ் பேட்டை
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு